வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
வார மலர்
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 05 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 300 பக்கங்கள் : 16




# பாராளுமன்றத் தேர்தல் திகதியில் மாற்றம் வரும்?

## நவம்பர் 14 நடத்துவதில் சட்டச் சிக்கல்

கொழும்பு, ஒக்ரோபர் 27

**பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்காக குறிக்கப்பட்ட திகதி, இன்னும் ஓரிரு நாட்களில் மாற வாய்ப்புள்ளதாக அரச செய்திகள் தெரிவிக்கின்றன.**

பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் 10ஆவது பிரிவின்படி, தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட நாள் குறித்து சில சட்ட ரீதியான சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

சட்டத்தின்படி, ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 11ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் கோரப்பட்டன.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து ஐந்து வாரங்களுக்கு குறையாமலும் ஏழு வாரங்களுக்கு மிகையாகமலும் வாக்கெடுப்புக்கான திகதியை நிர்ணயிக்க வேண்டும்.

அதன்படி, வேட்புமனு தாக்கல் முடிவடைந்த ஒக்ரோபர் 11ஆம் திகதி முதல் கணக்கிடப்படும் ஐந்து வார கால அவகாசம் நவம்பர் 15ஆம் திகதியும், ஏழு வார கால அவகாசம் நவம்பர் 29ஆம் திகதியும் நிறைவடையும்.

தற்போது பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நவம்பர் மாதம் 14ஆம் திகதி, சட்டக் காலத்தில் இடம்பெறாததால் அன்றைய தினம் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவது சட்டத்திற்கு முரணானது பல தரப்பினரும் தமது வாதங்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், இது தொடர்பாக தேர்தல் ஆணையகமும் கவனம் செலுத்தியுள்ளதாகவும் சட்ட

15

# தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர் மீது தாக்குதல்!

## மூவர் வைத்தியசாலையில் அனுமதி கரந்தன் பகுதியில் நேற்று சம்பவம்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 27

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரந்தன் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்கள் மீது மூர்க்கத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதர வாளர்கள் நேற்று மாலை தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதன்போது

15

# நாளை முதல் யாழ்தேவி காங்கேசன்துறை வரும்!

கொழும்பு, ஒக். 27

வடக்கு மார்க்கத்திலான ரயில் சேவை, நாளை முதல் வழமைக்குத் திரும்பவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான யாழ்தேவி ரயில் சேவை, எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

15

# அறுகம்குடா தாக்குதல் திட்டத்தின் மூளை போதைப்பொருள் வியாபாரி?

கொழும்பு, ஒக். 27

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவிலில் அமைந்துள்ள அறுகம்குடா தாக்குதல் திட்டத்தின் மூளையாக செயற்பட்டவர் ஒரு போதைப்பொருள் வியாபாரி என்று சிங்கள வார ஏடு ஒன்று பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் பிரதான தலைப்பு செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அறுகம்குடா பகுதியில்

15

# மன்னார் உட்பட 40 காற்றாலை மின்திட்டங்கள் குறித்து மீளாய்வு

கொழும்பு, ஒக். 27

நாட்டுக்கு பாதகமான நிபந்தனைகளுடன் கடந்த காலங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்ட 40 புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை மீளாய்வு செய்ய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் கீழ் மன்னார் காற்றாலை மின் திட்டம் உட்பட சுமார் 40 காற்றாலை மற்றும் சூரியசக்தி திட்டங்கள் மீளாய்வு செய்யப்படவுள்ளதாக அதன் செயலாளர் உதயங்க ஹேமபால தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டங்களின் மூலம் 5 மெகாவாட் முதல் 100 மெகாவாட் வரை

15

# அறுகம்குடா சுற்றுலாத் தளம் வழமை நிலைக்கு திரும்பியது

கொழும்பு, ஒக். 27

அறுகம்குடாவில் சுற்றுலாப் தளங்கள் மற்றும் ஹோட்டல்களுக்கு விடுக்கப்பட்ட குண்டுத் தாக்குதல் எச்சரிக்கை காரணமாக பாதிக்கப்பட்டிருந்த மக்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பியுள்ளதுடன், சுற்றுலாப் பயணிகளின் வருகையும் இடம்பெறுவதாக ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் மிகவும் பிரபல்யமான சுற்றுலாத் தளமாக உள்ள அறுகம்குடா இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்படலாம் என்பதால் அங்கு அமெரிக்கப் பிரஜைகள் எவரையும் செல்ல

15




# இந்தியாவை விடுத்து கியூபா பிரதமருக்கு அநுர அழைப்பு!

## பல தரப்புக்களும் விமர்சனம்

கொழும்பு, ஒக். 27

இந்தியாவுக்கு அழைப்பு விடுக்காது கியூபாவுக்கு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்தமை பல தரப்புக்களிடம் இருந்து விமர்சனங்கள் வெளிவந்துள்ளன என்று சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த வார ஏட்டின் அரசியல் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கியூபா பிரதமரை நாட்டுக்கு வருகை தருமாறு அழைப்பு

15

மின் தாக்கி குடும்பஸ்தர் மரணம்:

# வீட்டு உரிமையாளரை கைது செய்ய உத்தரவு!

முல்லைத்தீவு, ஒக். 27

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் மின்சாரம் தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்த சம்பவத்தில் வீட்டின் உரிமையாளரை உடன் கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஒட்டுசுட்டான், முத்து விநாயகபுரம் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்களின் விளம்பரச் சுவரொட்டிகளைக் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த

15

# சசிகலா ரவிராஜின் வீடு மீது தாக்குதல்!

## பக்கத்து வீட்டு பெண்ணே தாக்கினார்

யாழ்ப்பாணம், ஒக். 27

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளர் சசிகலா ரவிராஜின் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சசிகலா ரவிராஜின் வீட்டுக்கு அயல் வீட்டில் உள்ள பெண் ஒருவரினாலேயே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சசிகலா ரவிராஜ் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் அந்த பெண்ணினால் தான் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதாகவும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யவுள்ளதாகவும் சசிகலா சுட்டிக்காட்டினார். (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*65 ஆண்டுகளுக்கு பின்னர்*

# நாகர்கோவில் - எழுதுமட்டுவாழ் பாலம் புனரமைப்பு பணி ஆரம்பம்





வடமராட்சி, ஒக். 27

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் சந்தியிலிருந்து எழுது மட்டுவாழ் செல்லும் வீதியிலுள்ள பிரதான பாலத்தை புனரமைக்கும் பணியை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் ஆரம்பித்து வைத்தார்.

நாகர்கோவில் - எழுதுமட்டுவாழ் பிரதான பாலம் 1959 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மாரி காலம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மாரி காலம் முடிவடைந்தும் சிலமாதங்களாக (ஒரு வருடத்தில் சுமார் 6 மாதங்கள்) குறித்த பாதையில் நீர் நிரம்பி நிற்பதனால் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவது வழமை.

இந்த நிலையில் அண்மைய வருடங்களில் பல தடவைகள் நிதி ஒதுக்கப்பட்டும் வன ஜீவ ராஜிகள் திணைக்களம் அது தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதி என்று கூறி பல வருடங்களாக குறித்த பாலத்தை அமைக்க தடைபோட்டுக் கொண்டிருந்தது.

இதனால் சுமார் மூன்று ஆண்டுகளாக குறித்த பாலத்தின் புனரமைப்புப் பணிகள் தடைப்பட்டிருந்தன. வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு. பிரபாகரமூர்த்தி மற்றும் நாகர்கோவில் மக்கள் மேற்கொண்ட தொடர் முயற்சிகளால் குறித்த பாலத்தை புனரமைப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் இணங்கியது.

இதனையடுத்து வடமராட்சி கிழக்கு பிரதேச செயலரின் ஏற்பாட்டில் வடமாகாண ஆளுநரால் குறித்த பாலத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், கிராம உத்தியோகத்தர், துறைசார் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள், கிராம மக்கள் என்ப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த வீதியைப் பயன்படுத்த முடியாமையால் சுமார் 7 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள எழுது மட்டுவாழ் சந்திக்கு செல்வதற்கு மருதங்கேணி, புதுக்காடு ஊடாக சுமார் 40 கிலோ மீற்றர் தூரம் சுற்றி மக்கள் பயணித்துக் கொண்டுள்ளனர். (எ-02)

# இரத்த வாந்தி எடுத்த இளைஞன் உயிரிழப்பு

*யாழ்ப்பாணத்தில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணத்தில் நபரொருவர் இரத்த வாந்தி எடுத்த நிலையில் உயிரிழந்தார். கரவெட்டியைச் சேர்ந்த மகேந்திரன் சுசிகரன் (வயது - 34) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் இவருக்கு மின்சாரம் தாக்கியிருந்தது. அதன்பின்னர் இவருக்கு இடையிடையை வாந்தி ஏற்படுவது வழக்கம்.

கடந்த 25ஆம் திகதியும் காலை 10 மணிக்கு இவருக்கு இரத்த வாந்தி ஏற்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில் 11 மணியளவில் மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (எ-05)

# தற்போது சமூகநலன் அருகிவிட்டது!

*யாழ். அரச அதிபர் பிரதீபன் ஆதங்கம்*

யாழ்ப்பாணம், ஒக். 27

உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக நலன்களாக மனித வாழ்க்கை கூறுபோடப்பட்டுள்ளது. முன்னைய காலங்களை விடத் தற்போது மனித உள நலன் அதிகம் பேசும் பொருளாகியுள்ளது. அதற்கு உளநலப் பாதிப்புகள் அதிகரித்துள்ளமையே காரணமாகும். அது மாத்திரமன்றித் தற்போது சமூக நலன் அருகிவிட்டது என்று யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

"வேலையில் உளநலம்" எனும் தொனிப் பொருளிலான உலக உளநல நாள் மற்றும் தேசிய உளவளத்துணை நிகழ்ச்சி யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேலைச் சூழலில் உள்ளவர்கள் வேலைச் சூழலையும், குடும்ப சூழலையும் சமநிலையில் பேண வேண்டும். இதில் சமநிலை பாதிக்கப்படுமாயின் குழப்பம் ஏற்பட்டு முரண்பாடுகள் ஏற்பட்டு உளநலப் பாதிப்புகள் ஏற்படும். வேலைச் சூழலும், குடும்பச் சூழலும் ஆரோக்கியமாக அமைய வேண்டும் - என்றும் சுட்டிக் காட்டினார். (ஐ)

# யாழ். பொம்மைவெளியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் காலை கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல். சூரிய பண்டாரவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - அராலி வீதி, பொம்மைவெளி பகுதியில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட குறித்த நபரிடம் 7 கிராம் 500மில்லி கிராம் கஞ்சா இருந்ததாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் அராலி தெற்கு வட்டுக்கோட்டையை சேர்ந்தவர் எனவும், மேலதிக விசாரணையின் பின்னர் அவரை நாளை திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (எ-05)

# சங்குப்பிட்டி பால புனரமைப்பை பார்வையிட்டார் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஒக். 27

கேரதீவு சங்குப்பிட்டி பாலத்தின் புனரமைப்புப் பணிகளை நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பார்வையிட்டு அதிகாரிகளுடன் கலந்துரையாடி, புனரமைப்பு வேலைகளின் முன்னேற்றத்தை கேட்டறிந்து கொண்டார்.


இந்தப் பாலமானது மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியான நிலையில் தற்போது புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-05)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் தொடரும் கடும் பாதுகாப்பு கெடுபிடி



பொத்துவில், ஒக். 27

முன்னாள் அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் மற்றும் அதாவுல்லா உள்ளிட்டவர்களின் வருகையை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் முப்படையினர் மற்றும் பொலிஸார் குவிக் கப்பட்டனர்.

பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, சவளக்கடை, நாவிதன்வெளி, சொறிக்கல்முனை,வீரமுனை, சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், அட்டப்பளம், பாலமுனை, ஒலுவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, தம்பிலுவில், தம்பட்டை ,திருக்கோவில், பொத்துவில் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, அம்பாறை மாவட்டம் பொத்துவில் அறுகம்குடா பகுதி சுற்றுலா இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலும் இங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக கடும் பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியில் பொதுமக்கள் தமது அன்றாட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மேலும் முக்கிய சந்திகள் இதர வர்த்தக நிலையங்களில் பொலிஸார், மற்றும் இராணுவத்தினர், புலனாய்வாளர்கள் என மூன்று அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர சந்தேகத்துக்கு இடமாக இந்தப் பகுதிகளுக்கு வருகை தந்தவர்கள் துருவித் துருவி விசாரிக்கப்பட்டதுடன் தற்காலிக வீதித் தடைகள் அமைத்து பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. இது தவிர சந்தேகத்துக்குரிய வாகனங்கள் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனை செய்யப்பட்டன. அத்துடன் இடையிடையே விசேட அதிரடிப் படையினர் ரோந்து நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

மேலும் வீடுகள், கட்டடங்களில் படைத்தரப்பினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சில இடங்களில் ட்ரோன்களின் உதவியுடன் வான் பாதுகாப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது பொதுத் தேர்தல் சூடு பிடித்துள்ள நிலையில் அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் தங்களது தேர்தல் பிரசாரங்களை மும்முரமாக மேற்கொண்டு வருகின்றன. (எ)

### மனைவி முறைப்பாடு கணவன்மீது தாக்குதல்

## பொலிஸ் பரிசோதகரை கைதுசெய்ய நடவடிக்கை

குருநாகல், ஒக். 27

மனைவியின் முறைப்பாட்டையடுத்து கணவனை பலமாக தாக்கிக் காயப்படுத்தியதாக கூறப்படும் பொலிஸ் பரிசோதகரை கைதுசெய்வதற்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தகராறு காரணமாக பெண் ஒருவர் தனது கணவருக்கு எதிராக குரு நாகல், குளியாப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த நிலையில், குளியாப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோத கர் ஒருவர் இது தொடர்பான முறைப்பாட்டை பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர், பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்தால் இந்த முறைப்பாடு தொடர் பான விசாரணைகள் உரிய முறையில் மேற் கொள்ளப்படவில்லை என அந்த பெண் இந்த பொலிஸ் பரிசோதகரிடம் கூறியுள்ளார்.

இதனையடுத்து, குறித்த பொலிஸ் பரி சோதகர், பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்துக்கு சென்று முறைப்பாடு செய்த பெண்ணின் கணவனை பலமாக தாக்கியுள்ளார். இதன்போது, பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்தின் பொலிஸ் உத்தியோ கத்தர்கள் சிலர் இணைந்து இந்த தாக்குதலை தடுத்து, பொலிஸ் பரிசோதகர் மீது முறைப்பாடு செய்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான நபர் சிகிச்சைக் காக குருநாகல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸ் பரிசோதகருக்கு எதிராக நீதிமன்றில் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸ் பரிசோதகரை கைது செய்வதற்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (எ)


## சகல ரயில் ஊழியர்களுக்கும் இலவச பயண அனுமதி சீட்டு

அனைத்து ரயில் ஊழியர்களுக்கும் அவர்கள் வசிக்கும் பகுதிக்கும் பணியிடத்துக்கும் இடையில் பயன்படுத்த இலவச ரயில் பயண அனுமதி வழங்கப்படவுள்ள தாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் விஜித ஹேரத், உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் ஊழியர்கள் தொடர்ந்து பொது மக்களால் விமர்சிக்கப்படுவதை சுட்டிக் காட்டிய போக்குவரத்து அமைச்சு, இந்த நிலையை மாற்றும் நடவடிக்கையாக புதிய பயண அனுமதிச் சீட்டு வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்துக்கு பயனளிக்கும் வகையில், அனைத்து ரயில் ஊழியர்களையும் அவர்களின் செயல்திறனை மேம்படுத்த ஊக்குவிப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுர அரசாங்கத்தின் திட்டத்தில் எவ்வித மூலோபாயமும் இல்லை

## சர்வஜன அதிகாரத்தின் தலைவர் திலித் ஜயவீர சாடல்

கொழும்பு, ஒக். 27

**"ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்வைக்கும் வேலைத்திட்டத்தில் எந்த மூலோபாயமும் இல்லை"- இவ்வாறு சர்வஜன அதிகாரத்தின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.**



சர்வஜன அதிகாரத்தின் தலைவர் திலித் ஜயவீர தலைமையில் கணேமுல்ல நகரில் நடைபெற்ற வர்த்தகர்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நான் தற்போதைய ஜனாதிபதியிடம் அன்றும் சுட்டிக்காட்டினேன். அவர் முன்வைக்கும் எந்த திட்டத்திலும் எவ்வித மூலோபாயமும் இல்லை. இலங்கையில் மிகக் குறுகிய காலத்தில் அதிக கடன் வாங்கியவராக அநுரகுமார சரித்திரத்தில் இடம்பிடித்துள்ளார். எனவே, எதிர்க்கட்சியை எங்களிடம் கொடுங்கள் என்று மக்களிடம் கேட்கிறோம்"- என்றார். (எ)

# யாழில் பல்வேறு பகுதிகளிலும் சங்கு சின்னத்தினர் பிரசாரம்

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் சங்கு சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில்,

பொன்னாலை, சுழிபுரம், மூளாய் பகுதிகளில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளர்களான தருமலிங்கம் சித்தார்த்தன் மற்றும் பாலச் சந்திரன் கஜதீபன் ஆகியோர் பாராளுமன்றத் தேர்தலுக்கான பரப்புரையை மேற்கொண்டனர்.

இதன்போது தங்களது கொள்கை நிலைப்பாட்டையும்,



மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை கேட்டறிந்து அதற்கான தீர்வுகள் குறித்தும் விளக்கமளித்தனர். (எ)

# "மக்களிடம் பணம் இல்லை"

கண்டி, ஒக். 27

"வளமான நாடு அழகிய வாழ்க்கை என்று சொன்னார்கள். ஆனால், தீபாவளியைக் கூட கொண்டாட மக்களிடம் பணம் இல்லை"- இவ்வாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"மக்களின் கைகளிலே பணம் இல்லை, பொருட்களின் விலைகள் அதிகரித்து கொண்டு செல்கின்றன. கட்டுப்பாடு அற்று செல்கின்ற நிலைமை தோன்றியுள்ளது.

ஆகவே, இன்று மக்கள் இந்த தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதா அல்லது தீபாவளியையொட்டி கொண்டாடுவதா என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர்.

புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டு இருக்கின்றது. அவர்கள் எங்களைப் பார்த்து சொன்னார்கள். வளமான நாடு அழகிய வாழ்க்கை என்று சொன்னார்கள். ஆனால், தீபாவளி திருநாளுக்கு இன்னும் ஒரு சில நாட்களே இருக்கின்ற போது அந்த திருநாளை கொண்டாட மக்கள் தயாராகுவதாக எங்களுக்குத் தெரியவில்லை"- என்றார். (எ)



# ஜனாதிபதி அநுரகுமாரவுடன் டக்ளஸ் தேவானந்தா சந்திப்பு

கொழும்பு, ஒக். 27

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகமும் முன்னாள் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக பணியாற்றிய கடந்த காலப் பகுதியில், அடையாளம் கண்டு சிபார்சு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை தொடர்வது, மற்றும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டிருந்த திட்டங்களை ஆரம்பிப்பது வேண்டியவற்றுள், முன்னுரிமைப்படுத்தப்பட்ட 38 விடயங்கள் தொடர்பில் டக்ளஸ் தேவானந்தாவால் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதேவேளை, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் உள்ளிட்ட விடயங்கள், ஜனாதிபதியால் சாதகமாக பரிசீலிக்கப்பட்ட நிலையில் சந்திப்பு சுமுகமாக நிறைவடைந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் ஈ. பி. டி. பி. கணிசமான ஆசனங்களை பெற்று பாராளுமன்றம் வர வேண்டும் என்று ஜனாதிபதி அநுர, வாழ்த்தினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-05)

# ஜனாதிபதி அநுரகுமாரவுடன் கருத்து முரண்பாடு இல்லை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 27

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் எனக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக சிலர் பொய்ச் செய்திகளை பரப்ப முயற்சிப்பதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டியில் பிரதமர் ஹரிணி தலைமையில் இந்த மக்கள் சந்திப்பு நடைபெற்றது.

# அநுரவின் அரசாங்கத்துக்கு எதிராக அமெரிக்கா முதலாவது எச்சரிக்கை

## சொல்கிறார் கம்மன்பில

கொழும்பு, ஒக். 27

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் முதலாவது எச்சரிக்கையை அமெரிக்கா விடுத்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்தோடு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன தனக்கு எதிராக நீதிமன்றம் செல்ல வேண்டும் அல்லது பதவி துறக்க வேண்டும் என்றும் கம்மன்பில கூறினார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மகாநாயக்க தேரர்களை வெள்ளிக்கிழமை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்கள் அப்போதைய அரசாங்கத்தின் மீது கொண்டிருந்த அதீத வெறுப்பை வெளிப்படுத்தும் வகையில் தான் அநுரகுமாரவுக்கு வாக்களித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் இவ்விடயத்தை ஆராய்ந்து பார்த்திருந்தால் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கமாட்டார்கள்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதை போன்று புதிய அரசமைப்பை உருவாக்குவதாக ஜனாதிபதி அநுரகுமார, மகாநாயக்க தேரர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டால் நாட்டின் ஒற்றையாட்சி அரசமைப்பு முறைமை அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படும் என்பதை மக்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் அரசாங்கத்துடன் செயல்பட்டார். ஆனால், தற்போது ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் முதலாவது எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல் தொடர்பில் பிரதான குற்றவாளியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோருக்கு எதிராக விசாரணை அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி அவர்களை பாதுகாப்புத் தரப்பின் உயர் பதவிகளுக்கு நியமித்துள்ளார்.

இவ்வாறான பின்னணியில் தேசிய பாதுகாப்பு மீது நம்பிக்கை கொள்ள முடியாது என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தமது பிரஜைகளை அறுகம்குடா சுற்றுலா தலத்துக்கு செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளன.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மீது விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றி விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக இல்லை.

மாறாக என்மீது சேறு பூசும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன எனக்கு எதிராக நீதிமன்றம் செல்ல வேண்டும் அல்லது பதவி துறக்க வேண்டும்" - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.10.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஐப்பசி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழர் அரசியலில் ஊடுருவும் ஊழல்

பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்து வந்த பிரதான அரசியல் கட்சிகளின் தவறான ஆட்சிமுறைக்கும் ஊழல் முறைகேடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு எதிரான தென்னிலங்கை மக்களின் சீற்றமுமே கடந்த மாத ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸநாயக்கவை ஜனாதிபதியாக ஆட்சியதிகாரத்துக்கு கொண்டுவந்தது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலில் வெறுமனே மூன்று சதவீத வாக்குகளையே பெற்ற திஸநாயக்க இந்த தடவை 14 மடங்கு பாய்ச்சலைச் செய்து 42 சதவீத வாக்குகளைப் பெறக்கூடியதாக இருந்ததற்கு பிரதான காரணம் அவர் மீதும் தேசிய மக்கள் சக்தி மீதுமான தென்னிலங்கை மக்களின் விருப்பம் என்பதை விடவும் இதுவரை காலமும் ஆட்சி செய்த அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்கள் மீதான வெறுப்பேயாகும்.

முன்னைய ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபயவை வேட்பாளராக நிறுத்தி 52 சதவீதமான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியடைந்த ராஜபக்ஷக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுன இந்த தடவை வெறுமனே 2 சதவீத வாக்குகளையே பெறக்கூடியதாக இருந்தது. அதற்கு அடிப்படைக் காரணம் அரசியலில் ஊழல் முறைகேடுகளுக்கு எதிரான மக்கள் எழுச்சியேயாகும்.

பிரதான கட்சிகள் என்று சொல்லப்பட்டவை இன்று பழைய வாக்கு வங்கியை இழந்து அவற்றின் தலைவர்களே பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாமல் பயந்து ஒதுங்குகின்ற அளவுக்கு சிறிய கட்சிகளாகக் குறுகிநிற்கின்றன. தென்னிலங்கையில் ஜனாதிபதி தேர்தலைப் போன்றே பாராளுமன்ற தேர்தலிலும் ஊழலுக்கு எதிரான உணர்வுகளே மேலோங்கி நிற்கின்றன.

அதேபோன்று வடக்கு, கிழக்கிலும் குறிப்பாக தமிழ் மக்கள் தங்களை இதுகாலவரையில் பிரதிநிதித்துவம் செய்த கட்சிகளினதும் அவற்றின் அரசியல்வாதிகளினதும் முறைகேடுகள் மீது கவனத்தை செலுத்த வேண்டிய அவசியம் எழுந்திருக்கிறது.

தென்னிலங்கையில் அரசியலை தொழிலாகக் கொண்ட ஒரு வர்க்கம் இருப்பதைப் போன்று வடக்கு, கிழக்கிலும் ஒரு வர்க்கம் உருவாகி விட்டது. தொடர்ச்சியாக பாராளுமன்றத்துக்கு போவதற்காக அவர்கள் எதையும் செய்வதற்கு தயங்கமாட்டார்கள். தென்னிலங்கை பிரதான கட்சிகள் அரச அதிகாரத்தில் இருந்து வந்த காரணத்தினால் பெரும் ஊழல் இருந்தது. ஆனால், வடக்கு, கிழக்கில் அரசியல்வாதிகள் அரச அதிகாரத்தைக் கொண்டிராதவர்கள் என்பதால் ஊழல் ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்தில் இருக்கிறது.

தமிழர் அரசியலில் முன்னென்றும் காணப்படாத ஊழல் முறைகேடுகளும் அப்பட்டமாகவே பணத்துக்கு விலைபோகும் போக்கும் இன்று அதிகரித்துக் காணப்படுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெருவாரியான சுயேச்சைக் குழுக்கள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவது இந்த ஊழலின் ஒரு வெளிப்பாடேயாகும்.

புலம்பெயர் தமிழர் சமூகத்தின் மத்தியில் உள்ள முறைகேடாகப் பணத்தைக் குவித்த சில தனவந்தர்கள் வடக்கு, கிழக்கில் தமிழர் அரசியலை தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்ற வேட்கையில் பணத்தை அள்ளி வீசுகிறார்கள். அவர்களுக்கு வாலாட்டிக் கொண்டு தமிழ் அரசியல்வாதிகளில் பலர் தங்கள் தேர்தல் செலவுகளுக்காகவும் சொந்த தேவைக்காகவும் தேடிச்சென்று பணத்தைப் பெற்று வருகிறார்கள் என்பது இன்று எல்லோருக்கும் தெரிந்த இரகசியம்.

இவ்வாறாக 'வெளிப்பணம்' தமிழர் அரசியலை மாத்திரமல்ல சமூக வாழ்வையும் சீரழித்து வருகிறது. உரிமைக்காக உயிரைக் கொடுத்த மக்கள் வாழ்ந்த சமுதாயத்தில் இன்று அதே உரிமைகளுக்காக பாடுபடுவதாக கூறிக்கொண்டு போலித்தனமான அரசியல் செய்யும் பழிபாவத்துக்கு அஞ்சாத பிரகிருதிகளை மக்கள் இனங்கண்டு பாராளுமன்ற தேர்தலில் தோற்கடிக்க வேண்டும்.

தென்னிலங்கையில் பழைய அரசியல் கட்சிகளையும் தலைவர்களையும் மக்கள் நிராகரிப்பபதைப் போன்ற ஒரு நிராகரிப்பு வடக்கு, கிழக்கு தமிழர் அரசியலிலும் அவசியமாகிறது.

# லொஹறானுக்கு சொந்தமான டிபெண்டர் வாகனம் விபத்து

### கைகலப்பில் ஈடுபட்டதால் பதற்றம்

அநுராதபுரம், ஒக். 27

முன்னாள் அமைச்சர் லொஹான் ரத்வத்தவுக்கு சொந்தமான டிபெண்டர் வாகனம் வீதியோரம் இருந்த தொலைத்தொடர்பு கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

வாரியபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாதெனிய - அநுராதபுரம் வீதியில் தங்கஹ முல சந்தியில் வெள்ளிக்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றது.



விபத்து இடம்பெற்றதையடுத்து அங்கி ருந்த பொது மக்களுக்கும் வாகனத்தில் பய ணித்தவர்களுக்கும் இடையில் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

வாக்குவாதம் முற்றியதில் இரு தரப்பினரும் கைகலப்பில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இந்த நிலையில், விபத்துக்குள்ளான வாகனத்தில் பல ஆயுதங்கள் காணப்பட்டதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# திடீர் சுகவீனமுற்று உயிரிழந்த 15 வயது பாடசாலை மாணவி

### உடல் பாகங்கள் பகுப்பாய்வு

குருநாகல், ஒக். 27

குருநாகல், கிரியுல்ல பிரதேசத்தில் திடீர் சுகவீனமுற்று உயிரிழந்த 15 வயது பாடசாலை மாணவியின் உடல் பாகங்கள் மேலதிக பரிசோதனைக்காக அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த மாணவி கடந்த 23 ஆம் திகதி இரவு உணவுக்காக கிரியுல்ல நகரத்தில் உள்ள உணவகம் ஒன்றிலிருந்து கோழிப் பிரியாணி பொதி ஒன்றை கொள்வனவு செய்து வீட்டுக்கு எடுத்துச் சென்றுள்ளார்.

இந்த நிலையில், பாடசாலை மாணவி இரவு உணவை உட்கொண்ட பின்னர் திடீரென சுகவீனமுற்றுள்ள நிலையில் தம்பதெனிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மாணவியின் உடலில் அரிப்புகள் ஏற்பட்டு தழும்புகள் தோன்றியதாக மருத்துவ பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

பாடசாலை மாணவியின் சடலம் குருநாகல் மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதையடுத்து மாணவியின் உடல் பாகங்கள் மேலதிக பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ)

# மாணவிக்கு கடிதம் எழுதிய பாடசாலை அதிபர் கைது!

ஹற்றன், ஒக். 27

மாணவிக்கு கடிதம் எழுதிய அதிபருக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹற்றன் கல்வி வலய பாடசாலையொன்றின் அதிபர் தனது பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவி ஒருவரை தனிமையில் சந்திப்பதற்கு வருமாறு கடிதம் எழுதிய விடயம் அம்பலமானதால் அப்பாடசாலை அதிபருக்கு எதிராக பெற்றோர்களும் பிரதேச மக்களும் பாடசாலை முன்றலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


அந்த மாணவியை பாலியல் ரீதியாக அதிபர் சீண்டலுக்கு உட்படுத்தியிருக்கலாம் என்றும் இதன்போது சந்தேகம் எழுப்பினர்.

அந்த மாணவியும் இதற்கு முன்னர் அதிபர் தன்னிடம் தகாத முறையில் நடந்து கொண்டமை தொடர்பில் அதே அதிபருக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதமும் தற்போது வெளிப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற வலயக்கல்வி பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தனர்.

இதேவேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள பாடசாலை அதிபர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடிக்கை மனிதரைப் போலே...

அருணன் கபிலன்



மனிதருக்கு எத்தனையோ வகையான பலவீனங்களுண்டு. ஆனால், அவர்தம் அறிவுத் திறனை மழுங்கடித்துத் தன்னியல்பிலிருந்து இறங்கச் செய்வது வேடிக்கை என்னும் பலவீனம் தான். வேடிக்கையில் பலவகையுண்டு. சுய சிந்தனையின்றி பிறர் பேசுவதையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவர்களைக் கிராம வழக்கில் 'வாய் பார்ப்பவன்' என்பார்கள். இது வாய் வேடிக்கை.

ஐம்புலனும் இயக்கமின்றி செயலற்ற நிலையில் மெய்மறந்து வேடிக்கை பார்ப்பவர்கள் முற்றிலும் தங்களை இழந்துவிடுகிற இயல்புக்கு ஆளாகிறார்கள். இவர்களுக்குப் 'பராக்குப் பார்ப்ப வர்கள்' என்று பெயர். வேடிக்கையாகவே வாழ்க்கையைக் கழிப்பவரை 'வெட்டிப் பயல்' என்பார்கள்.

ஆட்டம்பாட்டங்கள் தொடங்கி, விளையாட்டுகள் வரை எல்லாவற்றையும் வேடிக்கை பார்ப்பவர்கள் நாம். சண்டையையும் விபத்தையும் பேரிடர்களையும்கூட வேடிக்கை பார்க்கிற வழக்கம் நமக்கு.

வேடிக்கை என்ற சொல்லே வேடிக்கையானதுதான். வேடிக்கை வேடிக்கையாகத் தோன்றி விளையாட்டாக மாறி, கேலிக்கூத்தாகி, பின்னாலே தந்திரமாக ஏமாற்றவும் செய்து, புரளி கிளப்பி வம்பிலே கொண்டுபோய் விட்டுவிடும். ஆனால், வேடிக்கை பலநேரங்களில் வேடிக்கையாக மட்டும் முடிந்துவிடுவதில்லை. வேதனையோடுதான் முடியும். 'விளையாட்டு வினையாய் முடியும்' என்பதைப் போல வேடிக்கையும் ஏதேனும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மனிதருக்கு எப்போதாவது வேடிக்கை தேவைப்பட்டால் பரவாயில்லை. பெரும்பான்மை மக்கள் வாழ்க்கை முழுவதையுமே வேடிக்கையாகத்தான் வைத்திருக்கிறார்கள். அப்படி வாழ்வதற்குப் பழக்கப்படுத்தப்படுகிறார்கள்.

இந்த வேடிக்கை மனிதர்கள் இன்று நேற்றல்ல, காலங்காலமாகவே நம்மோடு வாழ்ந்து வருபவர்கள்தான். பசுவுக்காகத் தன்னுடைய மகனையே தேர்க்காலிலிட்ட சோழனின் செயலை அன்றைக்கு வேடிக்கையாகப் பார்த்தவர்கள் எத்தனை பேர்? ஓரறிவுத் தாவரமாகிய முல்லைக்கொடி வாடிவிடக்கூடாது என்பதற்காகத் தேர் கொடுத்த வேள்பாரி வஞ்சகத்தால் கொல்லப்பட, பாரி மகளிர் 'எந்தையும் இலமே எம்குன்றும் இலமே' என்று சொந்த மண்ணிலேயே அகதிகளாக அலறியபோது, தட்டிக்கேட்க வேண்டிய புலவர்கள்கூட வேடிக்கை பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். கண்ணகி கோவலனை இழந்து மதுரை வீதிகளில் அரற்றியபோது, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள்தானே நம் மக்கள்.

உலகறியச் சபைதனிலே ஒற்றையாடை உடுத்தியிருந்த பாஞ்சாலியை துச்சாதனன் துகிலுரிந்த வேளையிலே பாண்டவர்கள் மட்டுமின்றி பீஷ்மர், துரோணர் உள்ளிட்ட பெருங்கூட்டமே வேடிக்கை பார்த்துக் கொண்டுதானிருந்தது.

நச்சுப் பொய்கையிலே சோதரர்கள் உயிரற்றுக்கிடக்க நீதிதேவனின் வினாக்களுக்கு விடைசொல்லிக் கொண்டிருக்கிறான் தருமன். அதில் ஒரு கேள்வி. இந்த உலகத்தில் மிகப்பெரிய வேடிக்கை என்ன என்பது. அதற்குத் தருமன் சொல்கிறான், 'நாள்தோறும் கணந்தோறும் ஒவ்வோர் உயிரும் இறப்பு என்னும் நிலைகொண்டு எமன் வீட்டுக்குச் சென்று கொண்டேயிருக்கின்ற வேளையிலே இதையெல்லாம் அறியக்கூடிய ஆறறிவு பெற்றிருக்கிற மனிதர்கள் தாங்கள் மட்டும் நிலைத்திருக்க வேண்டும் என்று கருதி, பொன்னையும் பொருளையும் போகங்களையும் நம்பிச் சேர்க்கிறார்களே இதுதான் பெரிய வேடிக்கை' என்று.

பாரதப் போர் நடப்பதை அறிந்ததும் மன்னர்கள் அனைவரும் குருஷேத்திரத்தில் கூடிப் பாண்டவர்கள் அணியிலோ, துரியோதனன் அணியிலோ போரிடத் தயாரானபோது சேர மன்னன் பெருஞ்சோற்று உதியன், 'நான் சண்டையிட வரவில்லை வேடிக்கை பார்க்கவும் வரவில்லை போர்க்களத்தில் யாவரும் பசியில்லாது இருக்கச் சோறளிக்க வந்திருக்கிறேன்' என்றானாம். அதனால்தான் அவனுக்கு 'பெருஞ்சோற்று உதியன்' என்ற பெயரே அமைந்தது.

சோழ மன்னன், திருக்கோவலூர் மலையமான் திருமுடிக்காரியின் மீது கொண்ட பழியுணர்ச்சியால் அவன் நாட்டின் மீது படையெடுத்து அவனை அழித்துவிட்டு, அவனுடைய வாரிசுகளையும் யானைக்காலிலிட்டுக் கொல்வதற்கு முடிவு செய்தபோது, அங்கும் வேடிக்கை நிகழ்கிறது. யானை மிதிக்கப்போகும் அந்தச் சிறுவர்களை வேடிக்கை பார்ப்பதற்கு ஒரு கூட்டம் இருக்கிறது. யானை தங்களை மிதித்துக் கொல்லப்போகிறது என்பதை உணராமல் அந்தச் சிறுவர்களும் யானையை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கோவூர்கிழார்தான் இந்த வேடிக்கையைக் காணப் பொறுக்காமல் வெகுண்டு மன்னனுக்கு அறிவுறுத்துகிறார்.

தமிழ் இலக்கண, இலக்கிய மரபில் பொருண்மொழிக் காஞ்சி என்று ஒரு துறை உண்டு. இது மன்னர்களுக்கும் மக்களுக்கும் அறிவுறுத்தும் பொருட்டுப் பாடப்பெறுவது. இந்த வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்தி, இதை 'வேடிக்கையாகக் கருதாதீர்கள்' என்று எச்சரிப்பதுதான் அந்தத் துறையின் உள்நோக்கம். மன்னர்களுக்கு என்று 'செவியறிவுறூஉத் துறை'யும் உண்டு. காதருகே சென்று மிகவும் அழுத்தமாக உபதேசிப்பதைப் போன்றது. வேடிக்கைக் குணம்கொண்ட மதியிலி மன்னர்களைத் திருத்துவதற்கு இத்துறையைப் புலவர்கள் பயன்படுத்தி பாடல்கள் தருவார்கள். இந்த வேடிக்கை களையும் பணியைச் செய்பவர்களைத்தான் திருவள்ளுவர் 'இடிப்பார்' என்று சுட்டிக் காட்டுகிறார். இவ்வாறு வேடிக்கையை இகழ்ந்து குறைகளைச் சுட்டிக்காட்டித் திருத்துபவர்களைப் பெறாத அரசு, பிறர் கெடுக்காமலே தானே கெடும் என்பது அவருடைய தீர்ப்பு.

ராமன் ஆண்டாலென்ன? ராவணன் ஆண்டாலென்ன? என்று எதன்பொருட்டும் அக்கறை சிறிதுமின்றி உண்டு, உடுத்தி, உறங்கி, களித்து, வேடிக்கையாய்ப் பொழுதைப்போக்கிக் கொண்டிருக்கும் மனிதர்கள், எல்லாக் காலங்களிலும் நம்மில் நிறைய பேர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

களிப்பும் கேளிக்கையும் கொண்டு உல்லாசம் நிறைகின்ற சமுதாயத்தில் அறிவு மழுங்கிப்போகும். சுய சிந்தனை அற்று, மானமிழந்து இழிவையும்கூடச் சரியென்று ஏற்றுக் கொள்ளும் மந்தவுணர்ச்சி மிகும். 'இதோ பார்', 'அதோ கேள்' என்று கண்களையும் காதுகளையும் திசைக்கொன்றாய்த் திருப்பிவிட்டு மனத்தை மயக்கி, அறிவை இயங்கவிடாமல் செய்வதில் வேடிக்கையை மிஞ்சியது வேறொன்றுமில்லை.

இந்த வேடிக்கை மனிதர்களுக்கு இன்றும் குறைவில்லை. ஆனால் முந்தைய வேடிக்கைகளை விடவும் இன்றைய வேடிக்கை மிகவும் ஆபத்தாயிருக்கிறது. தொலைக்காட்சி, கணினி, திறன்பேசி வெளிச்சத்தையே வேடிக்கை பார்த்து, அவற்றையே உண்மையென்று நம்பி அவற்றிலேயே மூழ்கி, அறிவினை இழக்கும் இளைய சமுதாயத்தைக் காணும்போது அச்சம் வருகிறது.

மொழியறியாது, வழியறியாது, வாழ்வுமறியாது எல்லாமே வேடிக்கை என்று மூழ்கிப் போகின்ற இவர்களை மீட்டெடுக்க இன்னொரு பாரதி தோன்றி, ஒரு புரட்சி செய்தே ஆக வேண்டும்.

## இந்தவார ராசிபலன் 27.10.2024 - 02.10.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 10
நல்ல நேரம்: 9.03 - 10.33 ராகு காலம் : 04.33 - 06.03 திதி : தசமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை கிடைக்கும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். எடுக்கும் முயற்சிகளில் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். ஓய்வெடுத்து, உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லை. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. எனவே, கஷ்டங்கள் வந்தாலும் கலங்காதீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். சிலருக்கு வீடு மாற்றம், தொழில் மாற்றம் என வாழ்க்கையில் ஏதேனும் ஒரு மாற்றம் ஏற்படும். தெய்வீக வழிபாடுகள் மனதில் நிம்மதி நிலவும். புதிய தொழில் பயணங்கள் மூலம் எதிர்பார்த்த தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். உங்களால் கூறப்படும், ஒரு வார்த்தை, ஒன்பதாக மாறி, பரப்பப்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறி மகிழ்வு தரும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொலைதூரப் பயணங்களால் ஆதாயம் உண்டு.. காற்றடிக்கும் போதே தூற்றி கொள்வது போல், நல்ல இலாபம் வரும் போது சேமித்து வைத்துக் கொள்வது நல்லது. அப்போதுதான், வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் தன்னம்பிக்கை உயரும். பலவழிகளிலும் பணவரவு அதிகரிக்கும். சிலருக்குக் கார் போன்ற சொகுசு வாகனங்கள் வாங்கும் உயர்வு நிலை ஏற்படலாம். தெய்வ சிந்தனைகள் மனதில் பூரண அமைதி நிலவும். எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும். அரசுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சிலருக்குப் பணி நிரந்தரத்திற்கான ஆணைகள் கிடைத்து, மனதில் இன்ப வெள்ளம் பாயும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்றம் காண்பீர்கள். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் கிடைக்கும் நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் பூர்வ புண்ணியத்தால் குலதெய்வ வழிபாடுகள் சிறக்கும். உறவுகள் வருகையால் விருந்து, மகிழ்ச்சிக் கொண்டாட்டம் என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். பணவரவு அதிகரித்தாலும், பழைய கடன்கள் அல்லது நோய்களால் கவலை ஏற்படும். பணியில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளை திருப்திப் படுத்தும் வகையில் செலவுகள் ஏற்படும். ங்க வேண்டிய சூழ்நிலை எழும். தீய குணம் உள்ளோரிடம் இருந்து விலகி இருப்பதே நல்லது.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். சிலருக்கு புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழ் உண்டாகும். சிலருக்குக் குழந்தைகள் தொல்லையும், அவமானங்கள் ஏற்படலாம்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் சுபகாரியங்களுக்காக வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும் பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். காரியத்தடைகள் ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியடையும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். மாணவர்கள் பாடங்களை அக்கறையுடன் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறமுடியும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். புத்திர பாக்கியம் ஏற்படும். புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அதில் கிடைக்கும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற தேர்தலில் எதைச் சொல்லி மக்களிடம் வாக்கு கேட்பது?



வீரகத்தி தனபாலசிங்கம்

## தடுமாறும் எதிரணி கட்சிகள்

தேர்தல் தோல்விகளினால் துவண்டு போகிறவர் அல்ல முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஆனால், தனது அரசியல் வாழ்வில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்படுவதற்கு கிடைத்த இறுதி வாய்ப்பு என்று சொல்லப்படக் கூடிய கடந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வி கண்டதால் அவர் நிச்சயம் வேதனை அடைந்திருப்பார் எனலாம். வேறு எந்த அரசியல்வாதியாகவும் இருந்தால் விக்கிரமசிங்கவைப் போன்று இவ்வளவு துரிதமாக பொதுவெளிக்கு மீண்டும் வந்திருக்கமாட்டார்.

முதலில் இரு தடவைகள் ஜனாதிபதி தேர்தலில் தோல்வி கண்ட பிறகு விக்கிரமசிங்க அடுத்தடுத்து மூன்று ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிடுவதை தவிர்த்தார். கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக அவரிடம் வசப்படாமல் இருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி இறுதியில் இரு வருடங்களுக்கு முன்னர் எவரும் எதிர்பாராத வகையில் அவரை வந்தடைந்தது. இந்த தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை விக்கிரமசிங்க தவிர்க்க முடியாமல் போனமை காலத்தின் கட்டாயம்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் தனது நிருவாகத்தினால் கடந்த இரு வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் விளைவாக தோன்றிய வழமை நிலையின் சாயல் மக்கள் தன்னை ஜனாதிபதியாக தெரிவுசெய்ய உதவும் என்று விக்கிரமசிசிங்க பெருமளவுக்கு நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால், 2022 மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு பாரம்பரிய அரசியல் தலைமைத்துவங்களுக்கு எதிராக மக்கள் மத்தியில் அதிகரித்து வந்த கடுமையான வெறுப்புணர்வை அவர் உணர்ந்துகொள்ள முடியாதவராகப் போய்விட்டார்.

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவதற்கு அவர் தீர்மானித்திருக்கிறார். ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று மேலும் ஐந்து வருடங்களுக்கு ஜனாதிபதியாக அதிகாரத்தில் இருக்க முடியாவிட்டாலும், தன்னால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளையே ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கமும் தொடர்ந்து முன்னெடுப்பதனால் விக்கிரமசிங்க திருப்தியடைகிறார் என்பதை அவரின் கருத்துக்கள் உணர்த்துகின்றன. பொருளாதார கொள்கைகைளைப் பொறுத்தவரை தனது ஆலோசனைகள் இனி மேலும் தேவைப்படும் என்ற எண்ணத்தை அவர் கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

ஒரு வார காலத்தில் இரு விசேட அறிக்கைகளை விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு வெளியிட்டிருக்கிறார். முதலில் அவர் விசேட அறிக்கை ஒன்றை வெளியிடவிருக்கிறார் என்று அறிவிப்பு வந்ததும் ஜனாதிபதி தேர்தலுக்கு பிறகு ஒரு மாத காலத்திற்குள் எதைச் சொல்லப்போகிறார் என்று அரசியல் மற்றும் ஊடக வட்டாரங்களில் பெரிய எதிர்பார்ப்பு காணப்பட்டது. ஆனால் அந்த அறிக்கையின் இறுதியில் அவர் தன்னுடன் கடந்த இரு வருடங்களாக பணியாற்றிய அரசில்வாதிகளை மீண்டும் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்வதற்கு எரிவாயு சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களிக்கவேண்டும் என்று மக்களிடம் கேட்டபோது அந்த வழமையான ஒரு தேர்தல் பிரசாரத்தின் ஒரு அங்கமாகவே முடிந்துபோனது.

சர்வதேச பங்காளிகளுடன் பொருளாதார நெருக்கடியை கையாளுவதில் ஜனாதிபதி திசாநாயக்கவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பிரச்சினைகளை எதிர்நோக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாக விக்கிரமசிங்க நம்புகிறார் என்று தெளிவாகத் தெரிகிறது.

அக்டோபர் 17 ஆம் திகதி அவர் வெளியிட்ட முதல் அறிக்கையில் இன்னமும் நான்கு வருடங்களில் வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்தத் தொடங்கும்போது அரச வருவாயை அதிகரிப்பதில் அரசாங்கம் பாரிய சவாலை எதிர்நோக்கும் என்று முன்னாள் ஜனாதிபதி எச்சரிக்கை செய்தார். இரு வருடங்களுக்கு முன்னர் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வேறு எந்த அரசியல்வாதியும் முன்வராத ஒரு நேரத்தில் துணிச்சலுடன் ஆட்சியைப் பொறுப்பேற்றது குறித்து எப்போதும் பெருமைப்படுகின்ற விக்கிரமசிங்க அனுபவமுடையவர்களும் பொறுப்புக்களை தட்டிக்கழிக்காதவர்களும் அடுத்த பாராளுமன்றத்தில் இருக்கவேண்டியது இன்றியமையாதது என்று குறிப்பிட்டார்.

அரசாங்க நிதியைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்ளைக் கொண்ட பாராளுமன்றம் பலம் பொருந்தியதாக இருப்பதற்கு தேர்தலில் எரிவாயு சிலிண்டர் வெற்றிபெறவேண்டும் என்று கூறியதன் மூலம் தனது நிருவாகத்தில் முக்கிய பொறுப்புக்களில் இருந்தவர்களை மீண்டும் பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று ஜனாதிபதி தேர்தலில் அதே சிலிண்டரை நிராகரித்த மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

மீண்டும் சரியாக ஒரு வாரம் கழித்து அக்டோபர் 24 ஆம் திகதி இன்னொரு விசேட அறிக்கையை விக்கிரமசிங்க வெளியிட்டார். ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு தன்னால் நியமிக்கப்பட்ட இரு குழுக்களின் அறிக்கைகளை தற்போதைய அரசாங்கம் வெளியிடாமல் இருந்தது குறித்து பிவிதுறு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில கிளப்பிய சர்ச்சை தொடர்பானதே முன்னாள் ஜனாதிபதியின் இந்த இரண்டாவது அறிக்கை.

விசாரணைக் குழுக்களின் அறிக்கைகளை வெளியிடுவதற்கு அரசாங்கத்துக்கு ஒரு வாரகால அவகாசம் வழங்கிய கம்மன்பில் கடந்த வார முற்பகுதியில் அவற்றில் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதையடுத்து கருத்து வெளியிட்ட கொழும்பு பேராயர் க்ர்டினல் மல்கம் ரஞ்சித் தேசிய மக்கள் சக்தியுடன் தேர்தல் காலத்தில் இணைந்து பணியாற்றிய குறிப்பிட்ட சில முன்னாள் பொலிஸ் உயரதிகாரிகளை பழிவாங்குவதற்காகவே விக்கிரமசிங்கவின் அரசாங்கம் விசாரணைக் குழுக்களை நியமித்ததாக குற்றஞ்சாட்டினார். அந்த குற்றச்சாட்டுக்கு தனது அறிக்கையில் விக்கிரமசிங்க பதிலளித்திருந்தார்.

அதேவேளை, தனது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புத் திட்டத்தை தற்போதைய அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி கடந்த வாரம் கோரிக்கை விடுத்தார். அந்த சம்பள அதிகரிப்பை நடைமுறைப் படுத்துவதற்கு தேவையான பணம் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் கூறிய அதேவேளை அவ்வாறு பணம் எதுவும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்று தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க கூறியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த விக்கிரமசிங்க பேசாமல் வீட்டில் இருக்காமல் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றாலாம் என்ற எதிர்பார்ப்பில் ஏதாவது ஒரு பிரச்சினையைக் கிளப்பிக் கொண்டிருப்பதாகவும் பொய்களைக் கூறிக்கொண்டிருப்பதாகவும் திசாநாயக்க கண்டனம் செய்தார்.

நடைமுறைச்சாத்தியம் குறித்து சிந்திக்காமல் பெருவாரியான வாக்குறுதிகளை தேசிய மக்கள் சக்தியும் எதிர்க் கட்சிகளும் ஜனாதிபதி தேர்தலில் அள்ளி வீசின. பதவிக்கு வந்திருக்கும் ஜனாதிபதி தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு பலம்பொருந்திய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அமைப்பதற்கு தங்களுக்கு பாராளுமன்ற தேர்தலில் அமோக ஆதரவை வழங்குமாறு மக்களிடம் கேட்கிறார். ஆனால் எதிர்க்கட்சிகளை பொறுத்தவரை, இப்போது எதைச் சொல்லி வாக்குக் கேட்பது என்று தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

ஒரு புறத்தில், தேசிய மக்கள் சக்தியினால் நாடு எதிர்நோக்கும் சவால்களை கையாள முடியாது என்று இந்த எதிர்க் கட்சிகள் பிரசாரத்தைச் செய்கின்ற அதே வேளை மறுபுறத்தில் ஜனாதிபதி திசாநாயக்கவின் ஒரு மாத கால நிருவாகத்தில் பிணைகண்டு பிடிப்பதிலும் அக்கறை காட்டுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் நிலை பெரிய பரிதாபமாக இருக்கிறது. ஜனாதிபதி திசாநாயக்கவுடன் ஒத்துழைத்துச் செயற்படுவதில் தங்களுக்கு பிரச்சினை எதுவும் இல்லை என்று கூறும் பிரேமதாச ஜனாதிபதிக்கு ஆதரவாகச் செயற்படுவதற்கு தனது கட்சி அரசாங்கம் அமைக்க ஆதரவு தருமாறு மக்களைக் கேட்கிறார். ஜனாதிபதியின் கரங்களை வலுப்படுத்துவதற்கு அவரது கட்சியை அல்லவா மக்கள் பதவிக்கு கொண்டு வருவார்கள். அதற்கு பிரேமதாச எதற்கு?


இது இவ்வாறிருக்க, அடுத்த பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிக்கு எந்த தேவையும் இல்லை என்றும் அரசியல் எதிரணி ஒழிக்கப்படுவதை உறுதிசெய்வதே இந்த தடவை பாராளுமன்ற தேர்தலில் வாக்காளர்களின் பொறுப்பு என்றும் ஜனாதிபதி திசாநாயக்கவும் அமைச்சர் விஜித ஹேரத்தும் தேர்தல் பிரசாரங்களில் தெரிவித்துவரும் கருத்துக்கள் சர்ச்சைக்குரியனவாக இருக்கின்றன.


"நாட்டுக்கு இன்று தேவைப்படுவது பலம்பொருந்திய அரசாங்கம் ஒன்றே தவிர, எதிர்க்கட்சி அல்ல. அதனால் அடுத்த பாராளுமன்றத்தை தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளால் மக்கள் நிரப்பவேண்டும். ஜனாதிபதி தேர்தல் முடிவுகளையடுத்து முன்னைய பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்களில் அறுபதுக்கும் அதிகமான அரசியல்வாதிகள் வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிந்த காரணங்களுக்காக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கிக் கொண்டார்கள். எஞ்சியிருக்கும் ஊழல்வாதிகளையும் எதிரணி அரசியல் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் புதியவர்களையும் தோற்கடிப்பதன் மூலம் பாராளுமன்றத்தை துப்புரவாக்கும் பணியை வாக்காளர்கள் நிறைவு செய்யவேண்டும்" என்று அவர்கள் இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை கட்டுநாயக்கவில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசினார்கள்.

புதிய ஜனாதிபதியாக திசாநாயக்கவை தெரிவுசெய்ததன் மூலம் மக்கள் பாரம்பரியமான அரசியல் கட்சிகளையும் அவற்றின் தலைவர்களையும் நிராகரித்திருப்பதுடன் மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய ஒரு புதிய தலைவராக அவர் மீதான நம்பிக்கையையும் அவர்கள் வெளிப்படுத்தினார்கள். பழைய கட்சிகளின் இதுகாலவரையான ஆட்சிமுனறயையும் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களையும் இனி மேலும் சகித்துக்கொள்ளத் தயாரில்லை என்பதையும் மக்கள் தெளிவாக வெளிக்காட்டியிருக்கிறார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றன. அவற்றை எவ்வாறு கையாளுவது என்பது மக்களைப் பொறுத்த விடயம்.







**வேறு வழியின்றி ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் ஒரு மாத கால நிர்வாகத்தில் பிழைகண்டு பிடிப்பதில் தீவிரம்**

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா, ஈழத்தமிழர்களுக்கு பொறுப்புடன் பதில் சொல்லும் காலம் உருவாகியுள்ளது!

**ச. வி. கிருபாகரன்**
(பிரான்ஸ்)

## தமிழ் அரசியல் மேதாவிகளின் பலவீனமே சிங்கள பௌத்த ஆட்சியாளர்களின் வெற்றி

இலங்கைதீவில், வடக்கு கிழக்கை தமிழர் தயாகமாக கொண்ட ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள், ஜனநாயக சோசலிச குடியரசான சிறிலங்காவின் பாரளுமன்றத்தில் ஒரு பொழுதும் தீர்வு காண முடியாதது என்பது, கடந்த ஏழு தசாப்தங்களிற்கு மேலான இலங்கை தீவின் சரித்திரம் நிருபித்துள்ளது. இதை இந்தியா உட்பட சர்வதேசம் மிக நன்றாக அறிந்துள்ளது.

இவ் நிலையில், ஈழத்தமிழ் மக்களுக்கான அரசியல் அபிலாசைகள நிவர்த்தி செய்யும் தீர்வு என்ன என்பதை, யாரால்? எப்பொழுது? எவ்விதமாக தீர்க்க முடியும் என்ற வினாவிற்கான விடையை, 1948ம் ஆண்டிலிருந்து பதவியிலிருந்து வரும் சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் - வேறுபட்ட கொள்கையின் அடிப்படையில், வேறுபட்ட முறையில், வேறுபட்ட மாற்றங்கள் மூலம், மிகவும் அழுத்தம் திருத்தமாக கூறி வருவதை, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் தலைவர்கள் அல்ல, தமிழ் அரசியல் மேதாவிகளிற்கு புரியததாது ஓர் புதிராக காணப்படுகிறது.

1948ம் ஆண்டிலிருந்து இன்று வரை பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள், உறுதி மொழிகள், தெற்கு வாழ் மக்களிற்கு ஒரு கதை, வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு வேறு கதையாக யாவும் தொடர்கிறது.

தமிழ் அரசியல் மேதாவிகளை உரையாற்றுமாறு மேடையேற்றினால், வேறுபட்ட அரசியல் கட்சிகளாக இருந்தாலும், இவர்கள் யாவரும், கிழித்து எறியப்பட்ட, பண்டா-செல்வா ஒப்பந்தத்திலிருந்து, இறுதியாக நியமன நிறைவேற்று ஜனதிபதி ரணில் விக்கிரமசிங்கா வரை என்ன கூறினார்கள், என்ன செய்தார்கள், எப்படியாக நாம் ஏமாற்றப்பட்டோம் என்ற சரித்திரத்தை நன்றாக கிளிப்பிள்ளை போல் கூறுவார்கள்.

ஆனால் சிங்கள பௌத்தவாதிகள் எம்மை 1948ம் ஆண்டு முதல் ஏமாற்றும் பொழுது, இவர்கள் யாவரும், என்ன செய்தார்கள் என்பதை மட்டும் அரசியல் மேடைகளில் கூற மாட்டார்கள். காரணம் இவ் அரசியல் மேதாவிகளின் பலவீனமே சிங்கள பௌத்த ஆட்சியாளர்களின் வெற்றி என்பதே உண்மை.

எமது பழைய தமிழ் அரசியல்வாதிகளிற்கும், தற்போதைய தமிழ் அரசியல் மேதைகளிற்கும் இடையில், நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ் வேறுபட்ட நபர்களை, நாம் ஒரே தரசில், ஒரே விம்பத்தில் பார்ப்போமானால், நாம் முன்னைய அரசியல்வாதிகளிற்கு செய்யும் மாபெரும் துரோகமாகும்.

ஒவ்வொன்றாக ஆய்வு செய்வதனால், இது கட்டுரையாக அல்ல, நூற்றுக் கணக்கான பக்கங்கள் அடங்கிய ஒரு புத்தகமாகவே மாறலாம். ஆகையால் புத்தகம் எழுதும் வேலையை வேறு ஒருவரிடம் ஒப்டைத்துவிட்டு எனது கட்டுரையை தொடர்கிறேன்.

மூன்று தசாப்தங்களிற்கு (1948-1983) மேலான தொடர்ச்சியான அகிம்சை அரசியலை நாம் ஆராய்வோமானால், அவ் வேளையில் திகழ்ந்த அரசியல்வாதிகளின் - மதிநுட்பம், ராஜதந்திரம், அனுபவம், அவர்களது தகமைகள், அவர்கள் தமது வாழ்க்கைக்கு செய்து வந்த தொழில், துணிவு போன்றவை தமிழ் மக்களது அரசியலை முன்னெ டுப்பதற்கு உதவியுள்ளதை நாம் காண முடிகிறது.

அவ்வேளையில், இரண்டு அரசியல் கட்சிகள் மட்டும் வடக்கு கிழக்கில் காணப்பட்டாலும், அவ் அரசியல்வாதிகள் முஸ்லீம் மக்களின் பிரதிநிதிகளிற்கும் தமது கட்சியில், குறிப்பாக தமிழரசு கட்சியில், இடம் கொடுத்து பயணித்ததை யாரும் மறுக்க முடியாது. இது வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு இடையில் அவ் வேளையிலிருந்த ஒற்றுமைக்கு ஓர் எடுத்து காட்டாகும்.

இன்று, வடக்கு கிழக்கில் உள்ள பல கட்சிகளின் பெயர்களை அங்கு வாழும் மக்களிற்கு தெரியாத நிலையில், கட்சி கட்சியாக புதிய கட்சிகள், நாளுக்கு நாள் சிங்கள பௌத்த ஆட்சியளரின் விருப்பத்திற்கு ஏற்ப, தற்போதைய அரசியல் மேதைகளினால் உருவாக்கப்பட்டுள்ளது. இதையிட்டு கட்சிகளை உடைக்கும் திறமை கொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அல்லது சுமந்திரன் போன்றவர்களிற்கு எந்த கூச்சமும் அறவே கிடையாது.

இன்றைய எமது தமிழ் அரசியல் மேதைகளிற்கும் ஐக்கியத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. இவர்களிற்கு போட்டி, பொறாமை, மற்றவர்களை வஞ்சிப்பதில் நிபுணர்களாக காணப்படுகிறார்கள்.

அடுத்து, தமிழரசு கட்சியை எடுத்து கொண்டால், அங்கு முன்ணனி அரசியல்வாதிகளாக காணப்பட்டவர்களில் தொண்ணுற்றி ஐந்து வீதமானாவர்கள் வழங்கறிஞர்கள். இதேபோல், தமிழ் காங்கிரசில் சில முக்கிய வழங்கறிஞர்களும் காணப்பட்டார்கள். இது அவர்களிற்கான தகுதியை காட்டுகிறது. அவ்வேளை தமிழ் அரசியல்வாதிகள் யாரும் முழுநேர உறுப்பினராக இருக்கவில்லை என்பதை அன்று வெளியாகிய 'சுதந்திரன்' பத்திரிகையில் படித்த ஞாபகம் உள்ளது.

இன்றைய அரசியல் மேதைகளில் சில வக்கீல்கள் காணப்பட்டாலும், இவர்களில் சுமந்திரனை உதரணமாக எடுத்து கொண்டால் தனது வக்கீல் திறமையை, தனது கட்சிக்குள் வழக்குகள் போடுவதற்கு கட்சியை பிரிப்பதற்கு பயன் படுத்துகிறரே தவிர, ஏழு தசாப்தங்களிற்கு மேலாக தமிழர்களை ஏமாற்றி வரும் எந்த சிங்கள பௌத்த அரசுகளிற்கு எதிராக எந்த வழக்கும் தொடுத்தார் என்ற சரித்திரமே கிடையாது.

அது மட்டும் அல்லாது, 2005ம் ஆண்டு வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்ட வழக்கை, பொறுப்பெடுத்து விட்டு, வழக்கு கொடுத்தவர்களிற்கு அறிவிக்காமல், இவ் வழக்கிலிருந்து சுமந்திரன் ஒதுங்கியது வேறு கதை.

### தமிழரசு கட்சி பிரச்சனைகள்

அன்றைய தமிழரசு கட்சியில் பிரபல வழங்கறிஞர்கள் இருந்த பொழுதிலும், தமிழரசு கட்சிக்குள் சில பிரச்சனைகள் ஏற்பட்ட பொழுதிலும், அவ்வேளையில் வக்கீலாக இருந்த யாரும், தமிழரசு கட்சிக்கு எதிராக நீதிமன்றம் சென்றார்கள் என்ற சரித்திரம் கிடையாது.

உதாரணத்திற்கு ஊர்கவற்துறை பாரளுமன்ற உறுப்பினருடனான திரு வி. நவரத்தினத்துடனான சர்ச்சை, கிழக்கில் மதிப்பிற்குரிய திரு இராஜதுரைக்கு, தமிழரசுகட்சியினால் இழைக்கப்பட்ட அநீதிகள் போன்று வேறு சில விடயங்களையும் இங்கு உதாரணமாக பார்க்க முடியும். அன்றைய அரசியல்வாதிகள் அரசியல்வாதிகள் - தமது இனம், தமது நிலம், தமது மக்கள், தமது கட்சியென பார்தார்களே தவிர, இக் கட்சியை எப்படியாக தமது தனிப்பட்ட ஆளுமைக்கு உட்படுத்த வேண்டும் என்றோ, இக் கட்சியிலிருந்து தனக்கு சவாலாக உள்ளவர்களை எப்படியாக கட்சியிலிருந்து ஓரம் கட்ட வேண்டும் என்றோ அறவே சிந்தித்தது கிடையாது.

அன்றைய அரசியல்வாதிகளின் மதிநுட்பம் ராஜதந்திரத்தால் தான் ஒப்பந்தங்கள் கிழித்து ஏறியப்பட்டாலும், தமிழர்களினது அரசியல் அபிலாசைகளிற்கான போராட்டங்களிற்கு சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் தலைகுனிந்தார்கள் என்பது சரித்திரம். 1961ல் நடைபெற்ற சத்தியாக்கிரகம், 1977ல் நடைபெற்ற ரயல் அற் பாரை நாங்கள் உதாரணமாக பார்க்க முடியும்.

முன்னைய அரசியல்வாதிகள் கலந்து ஆலோசித்து கூட்டான முடிவை எடுத்து வந்த காரணத்தினலேயே, அகிம்சை போராட்டங்கள் சிங்கள ஆட்சியளாரை ஆட்டம் காண வைத்தனர்.

இன்றைய அரசியல் மேதைகள் - கட்சி சார்பாக, சிங்கள பௌத்த அரசியல்வாதிகளுடன், ராஜதந்திரிகளுடன், சர்வதேச முக்கிய புள்ளிகளுடன் தனியான சந்திப்பு எதற்காக நடைபெறுகிறது என்பதை கேட்பதற்கு கட்சியில் உள்ள தலைவருக்கோ, இவர்களிற்கு ஜால்ரா போடும் துணை தலைவருக்கோ எந்த திராணியும் அறவே இல்லை.

இன்றைய அரசியல் மேதைகள் நடத்தும் போராட்டங்கள் என்பது, பாடசாலைகளில் நடக்கும் இல்ல விளையாட்டு போட்டிகளிற்கு ஒப்பானது. யாவரும் ஈழத்தமிழர், ஆனால் ஒருவர் வெற்றியாக செய்து முடிக்கும் போராட்டத்தை மற்றைய அரசியல் மேதைகள் மழுங்கடிக்கும் வேலைகளையே மேற்கொள்வார்கள். ஒருவர் அம்பாறையிலிருந்து காங்கேசன்துறை வரை, மற்றவர் அளவெட்டியிலிருந்து அப்பாறை வரை, பௌத்த விகாரைக்கு முன் பத்து பேருடன் "மாபெரும்" விழிப்பு போராட்டம். இதற்குள் காவல் துறை தங்களை கைது செய்ய வேண்டுமென காவல்துறையை இம்சை படுத்துவை தான் இவர்கள் அரசியல் வேலை திட்டங்கள்.

இன்று, சிங்கள பௌத்த அரசிடமிருந்து ஒன்றும் கிடையாது என்றும் தெரிந்தும் - துடிப்பெடுத்து ஆடுதல், சுதந்திர தின கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுதல், காலி வரை சென்று சிங்களத்தில் உரை, 'எங்களுக்கு சம உரிமை தாருங்கள. சமஸ்டியும் வேண்டாம், பதின் மூன்றும் வேண்டாம். உங்கள் புத்த சமயத்தை நாங்கள் ஏற்று கொள்கிறோம்" என்று உரை.

இறுதியில் மேற்கு நாடு ஒன்றின் தயவுடன் இதை 'இமாலாய பிரகடனமென' கொழும்பில் ஐந்து நட்சத்திர விடுதியில், புலன் பெயர்ந்த சில தமிழரும், தமிழ் அரசியல் மேதைகளும் விருந்து கொண்டாட்டம். இவை எல்லாம் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு என்னத்தை கொண்டு வரும், கொண்டுவந்துள்ளது?

இவ் நடவடிக்கைகளினால் இறுதியில் நன்றாக பயனடைவது, சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் என்பதை இவர்கள் யாரும் இன்றுவரை அறியாவிடில், இவர்கள் நல்ல வைத்தியராக பார்த்து வைத்தியம் செய்வது விரும்பத்தக்கது.

முப்பத்தைந்து வருட கால சாத்வீக போராட்டத்தை தொடர்ந்து, ஆயுத போராட்டம் ஆரம்பமாகியது. உண்மையை பேசுவதனால் - இன்றைய நவின நிலைமைகள் போல், எமது சாத்வீக போராட்டம் நடந்த வேளையில், உலகம் சர்வதேசம் இருந்திருக்குமாயிருந்தால் நாம் அன்றே எமது அரசியல் அபிலாசைகளை வென்றிருப்போம்.

அன்றைய உலகில், எமக்கு நடந்த அநீதிகளை, உலகிற்கு அறிவதற்கு, நாட்கள், கிழமைகள், மாதங்கள், வருடங்கள் சென்றன என்பதே உண்மை. இன்றைய காலகட்டத்தில் யாவும் ஒரு நிமிடத்தில் உலகை செல்கின்றது.

அத்துடன் இன்றைய நிலையில், தமிழீழ பிரஜைகள் புலம்பெயர் நாடுகளில் லட்சம் லட்சமாக வாழுகிறார்கள். வடக்கில் வாழும் யாரும் 'ஐயோ' எனும் பொழுது, அவை புலம்பெயர் தேசங்கள் உடன் பிரதிபலிக்கிறது.

சுருக்கமாக கூறுவதனால், சிங்கள பௌத்தம், வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு எந்த அரசியல் அடிப்படை உரிமைகளையும் ஆரம்பத்திலிருந்து கொடுப்பதற்கு தயாராகவில்லை. ஆனால், தமது ராஜதந்திர யுக்தியுனால் இந்தியா உட்பட சர்வதேசத்தையே முழு எமாழிகளாக்கினார்கள். தொடர்ந்து எமாழிகளாக்குகிறார்கள்.

ஆனால் தற்பொழுது ஆட்சிக்கு வந்துள்ள ஜேவிபி - என்.பி.பினர், மற்றைய ஆட்சியாளர் வடக்கு கிழக்கு வாழ் மக்களிற்கு எந்த அரசியல் உரிமைகளையும் கொடுக்கப்படாது என்ற சிந்தனையை, இவர்கள் தமது புதிய அரசியல் யாப்பு மூலம் நிறைவேற்றி முடிவிற்கு கொண்டு செல்ல போகிறார்கள் என்பதே யாதர்த்தம்.

அவர்கள் தேடும் மூன்றில் இரண்டு பாராளுமன்ற பெரும்பான்மை என்பது புதிய அரசியல் யாப்பிற்கானது மட்டுமல்ல. சீனா, ரஷ்யா, கியூபா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ள தனி பெரும் கட்சியின் ஆட்சியின் ஆரம்பமே, ஜேவிபி என்பவர்களது வெற்றி.

இன்று தமிழ் அரசியல் மேதைகளில் யாராவது, தமது உயிரை அர்பணித்து, முன்னைய தமிழ் அரசியல்வாதிகள் பயணித்தது போல் பயணிக்க முன் வருவார்களா? அப்படியானால, ஆயுத விடுதலை போராட்டம் முடிவிற்கு வந்த பின்னர் - சிங்கள பௌத்த அரசுகளிற்கு எதிராக, எந்தனை தமிழ் அரசியல் மேதைகள், எத்தனை சத்தியாகிரகம், கதவடைப்பு, கறுப்பு கொடி போராட்டங்களை நடத்தினார்கள்? இவற்றின் மூலம் எத்தனை தமிழ் அரசியல் மேதைகள் சிறைக்கு சென்றார்கள் என்பதை உங்கள் தேர்தல் மேடைகளில் கூறுங்கள்.

இப்படியானவர்களுக்கு வாக்களிப்பதன் மூலம், வடக்கு கிழக்கு வாழ் மக்கள் ஒரு பொழுதும் தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்க முடியாது. இப் பெயர்வழிகள், ஈழத்தமிழர்களிற்கு, மிகவும் ஆபாத்தான எதிர் காலத்தை உருவாக்குகிறார்கள் என்பதே உண்மை.

இன்றைய நிலையில், இந்தியா இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தால் உருவான பதின்மூன்றவது திருத்தம், இந்தியா இராணுவத்தின் வருகையும், வடக்கு கிழக்கில் உயிர் அழிவு, பொருளாதார சமூக கலாச்சார அழிவுகளிற்கு, இந்தியா ஈழத்தமிழர்களிற்கு பொறுப்புடன் பதில் சொல்லும் காலம் உருவாகியுள்ளது. சிறிலங்காவிடயத்தில், "இந்திரகாந்தியின் சிந்தனையை" சர்வதேசத்தின் துணையுடன் இந்தியா அமைதியாக மேற்கொள்ளவுள்ள காலம், வெகு தூரத்தில் இல்லை என்பதே இக் கட்டுரையின் முடிவுரை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கில் அநுர குமார பெற்ற 246,187 வாக்குகளுக்கு குறையாமல்

## சுமந்திரனின் தமிழரசு அணி பொதுத்தேர்தலில் பெறுமா?

பனங்காட்டான்

பொதுத்தேர்தலுக்கான நாட்கள் நெருங்கி வருகின்ற போதிலும், முன்னைய காலங்கள் போன்று அட்டகாச ஊர்வலங்கள், ஆதரவுக் கூட்டங்கள் என்பவை இதுவரை காணப்படவில்லை.

ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்த சூட்டோடு சூடாக பொதுத்தேர்தல் இடம்பெறுவதால், அதில் வெற்றி பெற்றவர்களே இதிலும் வெற்றி பெறுவர் என்ற எதிர்பார்ப்பு பலரிடம் உள்ளதுபோல தெரிகிறது.

மூன்று எம்.பிக்களுடன் மட்டுமே உள்ள ஜனாதிபதி அநுர குமாரவின் தேசிய மக்கள் சக்தி மூன்று இலக்கங்களுக்கும் அப்பால் வெற்றியீட்டினால் மட்டுமே நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை பெறமுடியும். பொதுத்தேர்தல் மாவட்ட ரீதியாக இடம்பெற்றாலும், 160 தொகுதிகள் வரையறை செய்யப்பட்டவாறே உள்ளன. இவற்றுள் 106 தொகுதிகளில் அநுர குமார கட்சி கடந்த ஜனாதிபதி தேர்தலில் கூடிய வாக்குகளைப் பெற்றது. 225 எம்.பிக்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 113ஐ பெற்றால் மட்டுமே மசோதாக்களை இலகுவாக நிறைவேற்ற முடியும்.

கடந்த மாத ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி 46 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. இந்த எண்ணிக்கை தேசிய மக்கள் சக்தி பெற்ற 106 உடன் ஒப்பிடுகையில் 50 வீதத்துக்கும் குறைவானது. இதனால் அநுர குமார அணி 113 ஆசனங்களை இலகுவாக வெற்றி கொள்ளலாமென மற்றைய கட்சிகள் தங்களுக்குள் நம்புகின்றன.

தெற்கில் மற்றைய கட்சிகள் நடத்தும் போட்டி எதிர்கட்சியை கைப்பற்றுவதற்கானது. ஆனால், சஜித் பிரேமதாசவை பிரதமராக்குவோம் என்ற முழக்கத்துடன் இவரது அணியினர் அறிக்கைப் பரப்புரைகளை மேற்கொள்கின்றனர். இதனை முறியடிப்பதற்காக அநுர குமார அணி பெரும்பான்மையான வேட்பாளர்களாக இளைஞர்களையும் பெண்களையும் களத்தில் இறக்கியுள்ளது.

தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் தமது தரப்பின் பரப்புரைக்கு தலைமை தாங்கிவரும் ரணில் விக்கிரமசிங்க, இளையோரால் நாடாளுமன்றத்தை நிரப்பினால் ஆட்சி வெற்றி பெறாது என்ற பாணியில் தமது கருத்துகளை விசிறி வருகிறார். நாட்டின் பொருளாதார நிலைமையை தொடர்ந்து சீராக்க வேண்டுமானால் தமது நிர்வாகத்திலிருந்த துறைசார் அனுபவஸ்தர்களை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்ய வேண்டுமென்று வேண்டுகிறார். இப்போதுள்ள அரசியல் களம் இவரது குரலுக்கு வாய்ப்பானதாக இல்லை.

1970ல் சிறீமாவோ பண்டாரநாயக்க மூன்றிலிரண்டு பெரும்பான்மையில் ஆட்சிக்கு வந்தபோது அவரது மகனான அநுர பண்டாரநாயக்க மற்றும் மகிந்த ராஜபக்ச உட்பட பலர் முப்பது வயதுக்கும் குறைவான இளையவர்களாக இருந்தனர். 1977ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆறிலிரண்டு பெரும்பான்மையில் ஆட்சியைக் கைப்பற்றியபோது அவரது பெறாமகனான ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுர டானியல் உட்பட பெரும்பான்மையினர் திருமணம் புரிந்திராத இளையோராக இருந்தனர்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்களில் பல இளையோர் பிற்காலத்தில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பல அமைச்சர் பதவிகளை வகித்துள்ளனர். முதியோர் இல்லம் செல்ல வேண்டியவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று அரசியல் முழக்கமிடும் இக்காலத்தில் இளையோரை தவிர்க்க வேண்டுமென்றும் அவர்கள் அனுபவமற்றவர்கள் என்றும் சொல்லிக் கொண்டு அவர்களை நீக்குமாறு கோருவது முன்னுக் குப்பின் முரணாக உள்ளது.



பெரும்பான்மையான இளையோர் மற்றும் பெண்களை வேட்பாளர்களாக்கியுள்ள ஜனாதிபதி அநுர குமார அணி, எப்பாடுபட்டாவது மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறும் இலக்குடன் பரப்புரைகளில் ஈடுபட்டுள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கவும், இனப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான புதிய அரசியலமைப்பை உருவாக்கவும் மூன்றிலிரண்டு அவசியம் என்பதை காரணம் கூறி வாக்குக் கேட்கப்படுகிறது.

இது விடயத்தில் எதிர்பாராத வகையில் எதிர்தரப்பிலிருந்து இவர்களுக்கு ஆதரவு கிடைத்துள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு தேவையான ஆதரவை நாடாளுமன்றத்தில் தங்களால் தரமுடியுமென்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரேமதாசவும், பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்சவும் முற்கூட்டியே (அநுர அணி கேட்காமல்) அறிவித்துள்ளனர். இதுகூட அரசியலில் வித்தியாசமான ஒரு நகர்வு. அதாவது அநுர அணிக்கு மூன்றிலிரண்டு எண்ணிக்கை தேர்தலூடாக தேவையில்லை என்பதை வாக்காளப் பெருமக்களுக்குத் தெரிவிப்பதற்கானது.

எதிர்கட்சிகள் அறிவித்திருக்கும் இந்த ஆதரவு அநுர குமார தரப்பை ஓர் இக்கட்டுக்குள் தள்ளியுள்ளது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையை எதிர்கட்சிகள் வழங்குமானால் தனிக்கட்சியாக அந்த வெற்றியை அநுர குமார பெறுவதை தடுக்கலாம். அதேசமயம், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட வேண்டிய கட்டாயத்துக்குள்ளும் அநுர குமார நிர்ப்பந்திக்கப்படுவார்.

தெற்கில் அரசியல் நிலைவரம் அநுர குமாரவை மையப்படுத்தி நகர்ந்து கொண்டிருக்கையில், தமிழர் தாயகத்தின் நிலைமை கடந்த வாரம் குறிப்பிட்டதுபோன்று மாட்டு வால் போல் கீழ்நோக்கி வளர்ச்சி காண்கிறது. இங்கு போட்டியிடும் தமிழ் கட்சிகளின் பெயர்களையும் அவர்களின் சின்னத்தையும் மட்டுமன்றி வேட்பாளர்களின் பெயர்களைக்கூட அடையாளப்படுத்தி நினைவில் வைத்திருக்க முடியாத அவலம் அப்பாவி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களின் தாய்க்கட்சியாகவும், அவர்களின் தேசிய உரிமைக் கட்சியாகவும் மதிக்கப்பட்டு வந்த இலங்கை தமிழரசு கட்சி ஒரு கொழும்பு இறக்குமதியால் சின்னாபின்னமாகி நிற்கிறது.

> **பொதுத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய கட்சிகளின் பெயர்களையும் வேட்பாளர்களின் சின்னங்களையும் அடையாளப்படுத்தி நினைவிற் கொள்ள முடியாது அப்பாவி மக்கள் அவலப்படுகின்றனர். இது போதாதென்று மந்தி(ரி)ப் பதவிக்கும் வேட்டை நடைபெறுவதாக தெற்கிலிருந்து செய்தி வருகிறது. முதலில், ஆகக்குறைந்தது ஜனாதிபதி தேர்தலில் அநுர குமார தமிழர் தாயகத்தில் பெற்ற 246,187 வாக்குகளையாவது சுமந்திரன் அணி பெறுமா என்பதே இன்றுள்ள கேள்வி.**

தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சியை அந்தக் கொழும்பன் இழுத்துச் சென்றபோதே இந்த நிலைமை அந்தக் கட்சிக்கு ஏற்படுமென்று உள்வீட்டுக்காரர்கள் உணர்ந்திருந்தனர். பெருந்தலைவர் என்று அழைக்கப்பட்ட சம்பந்தன் உயிருடன் இருந்தபோதே, "ஐயா சொல்கிறார் - ஐயா விரும்புகிறார் - ஐயாவின் கருத்து" என்று தனது விருப்பங்களை அந்தக் கொழும்பான் நிறைவேற்றியபோதே வீட்டின் அழிவு ஆரம்பமானது.

"ஐயாவுக்கு வயது போய்விட்டது, அவர் பதவி துறக்க வேண்டும்" என்று பகிரங்கமாக சொன்னபோதே, கட்சியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர கொழும்பான் துடிக்கிறார் என்பது தெரியவந்தது. கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிட்டு படுதோல்வி கண்டபின்னர் செயலாளர் பதவியை தமக்குத் தருமாறு புதிய தலைவராகத் தெரிவான சிவஞானம் சிறீதரனிடம் கொழும்பான் கேட்டபோதே, வரப்போகும் தேர்தலில் வேட்பாளரை நியமிக்கும் அதிகாரத்தை கைப்பற்ற திட்டமிட்டுள்ளார் என்பது தெரியவந்தது.

அதுவும் கைகூடாத நிலையில், கட்சியின் பதில் பொதுச்செயலாளரான தமது சகாவை அழைத்து வேட்பாளர் தெரிவை கனகச்சிதமாக நிறைவேற்றினார். பதில் பொதுச்செயலாளராக இருப்பவர் முன்னர் வடமாகாண சபையில் ஓர் அமைச்சராக இருந்தபோது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் அப்பதவியிலிருந்து தூக்கி வீசப்பட்டவர் என்பது பழங்கதையல்ல.

இப்போது பொதுத்தேர்தலில் போட்டியிடும் இந்த அணியின் வேட்பாளர்கள் அனைவரும் கொழும்பானின் கைப் பொம்மைகள். உள்ளத்தால் ஒத்துவராத சிறீதரனை முதன்மை வேட்பாளராக்கி வாக்காளர்களை ஏமாற்றும் முயற்சி அரங்கேற்றப்படுகிறது. தாமே அதிகூடிய வாக்குகள் பெற்று தெரிவாக வேண்டும் அல்லது போனஸ் ஆசனத்தைப் பெற வேண்டுமென்பது கொழும்பானின் இலக்கு. அதுவும் தவறினால் தேசியப் பட்டியலூடாக எம்.பியாவதற்கு திட்டமுண்டு. (கடந்த பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்க தேசியப் பட்டியலூடாக எம்.பியானது போன்று).

தாயகத்தின் தற்போதைய களநிலைவரத்தை விபரிக்கும் ஒளிக்காட்சியொன்று காற்று புக முடியாத இடங்களிலும் ஊடுருவி செல்கிறது. தமிழரசு கட்சிக்குள் அதிகம் பேசப்படும் சுமந்திரன், சிறீதரன் ஆகியோரின் கொடும்பாவிகள் மீதும் அவர்களின் புகைப்படங்கள் மீதும் பொதுவெளியில் வைத்து குற்றப் பத்திரிகைகளை வாசிக்கும் இளைஞர் கூட்டம் தாக்குதல் நடத்துவதை இதில் காண முடிகிறது. இந்தளவுக்கு தமிழரசின் நிலை கேவலமாகியுள்ளது. இதனை உணராத கட்சித் தலைகள் தங்களின் வெற்றியை உறுதிப்படுத்தி கொழும்பில் அமைச்சர் பதவிக்கு கண் வைத்துள்ளதாக கொழும்பிலிருந்து சிங்கள அரசியல் கட்சிகளூடாக செய்திகள் வெளிவருகின்றன. வேட்டி போனாலும் பரவாயில்லை, கௌபீசணமாவது காப்பாற்றப்படுமா என்ற நிலையில் மந்தி(ரி) பதவியா?

இவர்கள் பார்வைக்கு ஒரு கணக்கு. 1977 பொதுத்தேர்தலில் 421,888 வாக்குகளை வடக்கு கிழக்கில் பெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி, 2004 பொதுத்தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பாகி 633,654 வாக்குகளைப் பெற்றது. 2020 பொதுத்தேர்தலில் 327,118 வாக்குகளை மட்டுமே கூட்டமைப்பினால் பெற முடிந்தது.

கடந்த மாத ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தாயகத்தில் போட்டியிட்ட அநுர குமாரவின் தேசிய மக்கள் சக்தி எந்த ஆர்ப்பாட்டமுமின்றி 246,187 வாக்குகளை இலகுவாக பெற்றது. தமிழரசு கட்சி என்ற பெயரில் தனியனாக போட்டியிடும் சுமந்திரன் அணி வருகின்ற பொதுத்தேர்தலில் 246,187 வாக்குகளையாவது பெற்று மானத்தைக் காப்பாற்றுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் ஆரம்பகால நினைவுகள்!

**மாணிக்கம் நடராஜசுந்தரம்**
ஒய்வுநிலைப் பேராசிரியர்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பொன்விழாவைக் கொண்டாடும் சமகாலத்தில், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடம் தனது 25 ஆவது வருட நிறைவில் வெள்ளி விழாவைக் கொண்டாடுகிறது. வெள்ளி விழா நிகழ்வுகள் நேற்றைய தினம் (ஒக்ரோபர் 26 ஆம் திகதி) முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மண்டபத்தில் நடைபெற்றது. அதனையொட்டி பீடத்தின் முதலாவது பீடாதிபதியும், ஓய்வுநிலைப் பேராசிரியருமான மா. நடராஜசுந்தரம் எழுதிய வரலாற்றுப் பார்வை இது.**

1974ஆம் ஆண்டு ஆடி மாதம் 25ஆந் திகதி வியாழக் கிழமை வெளியிடப்பட்ட 121-5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியாகிய பிரகடனத்தின் மூலம் 1974 ஆவணி மாதம் முதலாம் நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஒரு வளாகமாக நிறுவப்பட்டது. பல்கலைக்கழக வளாகம் 1974ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 06ஆந் திகதி அப்போதைய பிரதமரான திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் கே. கைலாசபதி வளாகத்தின் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டார். இலங்கையின் வடபகுதியில் ஒரு பல்கலைக்கழக வளாகம் நிறுவப்பட்டமை ஒரு வகையில் இலங்கைத் தமிழரின் ஒரு நீண்டகாலக் கல்வித் தேவையையும் இலட்சியத்தினையும் நிறைவு செய்வதாகக் காணப்பட்டது.

**வளர்ச்சிப் பாதையில்...**

சட்டபீடம், உடற்கல்வி பீடம் இரண்டையும் நிறுவுவதற்கு வர்த்தமானி அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் ஆரம்பத்தில் விஞ்ஞான பீடம், மனித பண்பியற் பீடம் ஆகிய இரு பீடங்கள் மட்டுமே செயற்





படலாயின. தேவையான நிர்வாக அலுவலகங்களும் மனித பண்பியற் பீடமும், அமரர் சேர் பொன் இராமநாதனால் தாபிக்கப்பட்ட முதன்மையான இந்துக் கல்வி நிறுவனமாகிய பரமேஸ்வராக் கல்லூரி வளவில் அமைந்தன. வளாகத்தின் மத்திய நிலையமாக இது விளங்கியது.

விஞ்ஞான பீடம் அமெரிக்க சமயப்பணி அமைப்புக்களால் 1821இல் நிறுவப்பட்ட முதன்மையான கிறீஸ்தவக் கல்வி நிறுவனமாகிய யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரி மாணவர் பிரிவுக்கான வளாகத்தில் அமைந்தது. விஞ்ஞான பீடம் 1978 ஆனி மாதம் திருநெல்வேலி வளாகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

மருத்துவ பீடம் 1978 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கைதடியிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடங்களில் தற்காலிகமாக இடம்பெற்றிருந்த மருத்துவ பீடம் திருநெல்வேலியிலுள்ள பிரதான வளாகத்துக்கு வடக்கே ஒரு கிலோமீற்றர் தொலைவிலமைந்த புதிய கட்டடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டதன் விளைவாக உயர்கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் 1979 தைமாதம் 01ஆம் நாள் தன்னாதிக்கமுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக மாற்றமடைந்தது.

காலஞ்சென்ற பேராசிரியர் சு.வித்தியானந்தன் தன்னாதிக்கமுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். பல்கலைக்கழகத்தில் அப்பொழுது மருத்துவம், விஞ்ஞானம், கலை மற்றும் விவசாயம் ஆகியவற்றுக்கான நான்கு பீடங்கள் இருந்தன. இவற்றில் விவசாய பீடம் கிளிநொச்சியில் அமைந்திருந்தது. எந்திரவியற் பீடத்தை நிறுவுவதற்கு கொள்கையளவில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது. ஆனால் தொடர்ந்து வந்த பல்வேறு பிரச்சனைகளால் செயற்பாடடைத் தொடரமுடியாமல் போய்விட்டது.




மருதனார்மடத்தில் அமைந்துள்ள நுண்கலைக்கழகம் (இராமநாதன் நுண்கலைக்கழகம்) கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவத்துறை என்பனவற்றையும் இணைத்து முழுவளர்ச்சி பெற்ற நிறுவனங்களாக தரமுயர்த்த எடுத்த முயற்சிகள் வெற்றியளித்து இன்று அவை தனித்தனி பீடங்களாக மிளிர்கின்றன.

1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தை அடுத்து கொழும்பில் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி மூலம் கற்பிக்கப்பட்ட வர்த்தகத் துறை மூடப்பட்டு யாழ் பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்டு கலைப்பீடத்தின் கீழ் ஒரு துறையாக இருந்தது. பின்னர் காலப்போக்கில் முகாமைத்துவக் கற்கைநெறியும் மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தக முகாமைத்துவக் கற்கைகள் துறையாக பெயர் மாற்றம்செய்யப்பட்டு கலைப்பீடத்தின் கீழ் தொடர்ந்து இயங்கியது. பேராசிரியர் சிவநாதன், பேராசிரியர் நித்தியானந்தன், பேராசிரியர் பாலக்கிருஸ்ணன் ஆகியோர் துறைத் தலைவர்களாகக் கடமையாற்றினார்கள். மீண்டும் பேராசிரியர் பாலக்கிருஸ்ணன் பங்குனி 14, 1991 இலிருந்து மூன்று வருடங்களுக்கு முகாமைத்துவக் கற்கைகள் துறைக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். கலைப்பீடத்தின் பொருளியல்துறை மண்டபத்திலிருந்து, பல்கலைக்கழக பிரதான கட்டடத்திற்கு மாற்றப்பட்டோம்.

இருபக்கமும் நடைபாதையும் நான்கு பெரிய வகுப்பறைகளுடன் எங்கள் துறை ஆரம்பமானது. ஆனாலும் கலைப்பீடத்தின் கீழ் தான் செயற்பட்டு வந்தோம். 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட மோசமான உள்நாட்டுப் பிரச்சனைகளால், சுன்னாகத்திலிருந்த மின்பிறப்பாக்கி குண்டுவீசித் தகர்க்கப்பட்டது. யாழ் நகரம் முற்றாக இருளில் மூழ்கியது. பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் சீர்குலைந்தன. போக்குவரத்துகள் ஸ்தம்பிதம் அடைந்தன. துவிச்சக்கரவண்டி தான் எமக்கு போக்குவரத்துக்கு உதவிகரமாக அமைந்தது.

எந்தநேரம் என்ன நடக்கும்?, எங்கு ஷெல் வந்து விழும்? என்ற பயத்துடன் எல்லோரும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இலங்கைப் போக்குவரத்துச் சபை முற்றாகவே செயலிழந்திருந்தது. பாடசாலைக் கல்வியும், பல்கலைக்கழகக் கல்வியும் புறக்கணிக்கப்பட்



டால் எமது பிரதேசம் சூனியப் பிரதேசமாக மாறலாமென்பது எமக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் பல்வேறு இடர்கள் மத்தியிலும் நாம் கல்வியையும், பல்கலைக்கழக விளையாட்டுக்களையும் தொடர்ந்து நடத்தினோம்.

1991ஆம் ஆண்டு தொடக்கம் 1996ஆம் ஆண்டு வரை நானும் அமரர் பேராசிரியர் கணேசலிங்கம், அமரர் பேராசிரியர் துரைராஜா மற்றும் வங்கிகளில் தொழில் புரிபவர்கள் சிலரும் திங்கட்கிழமை காலை 4.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து பயணமாகுவோம். நாம் 5.30 மணிக்கு வல்லைவெளியைக் கடந்து விடுவோம். 6.30 மணிக்கு நான் பல்கலைக்கழகத்திற்கு வந்து, 8 மணிக்கு விரிவுரைகளை ஆரம்பிப்பேன்.


விரிவுரைகள் பெரும்பாலும் எல்லோருடைய உதவியுடன் தமிழிலும் ஒரு சிலருக்கு ஆங்கில மொழியிலும் நடைபெறும். மாணவர்களும் சிறப்பாகக் கற்றார்கள்.

எந்தக்கால கட்டத்திலும் துப்பாக்கியை ஏந்திய ஒருவரும் பல்கலைக்கழகத்தினுள் வரவில்லை, எந்தவிதமான சுவரொட்டிகளும் ஒட்டப்படவில்லை, கல்வியை ஊக்கமளித்தார்களே தவிர, தடையேற்படுத்தவில்லை.

அண்மைக்காலங்களில் இலங்கை அரசாங்கத்திலுள்ள கல்வியமைச்சர் இதனையொரு உதாரணமாகக் கொண்டு உரையாற்றியிருந்தார். மண்ணெண்ணெய், அரிசி, துவிச்சக்கரவண்டி யாவும் நியாயமான விலையில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. அந்தக் காலகட்டத்தில் கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவராகவிருந்த தனேந்திரன் ஆற்றிய சேவைகளை மறக்க முடியாது. அவருடைய முயற்சியால் தான் அருமையான பொருட்கள் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாகவிருந்தது. நான் வர்த்தகமும் முகாமைத்துவமும் துறையின் தலைவராக 1993ஆம் ஆண்டு பொறுப்பேற்றேன்.

1991 -1995 காலப்பகுதியில் துவிச்சக்கரவண்டியில் 60 கிலோமீற்றர்கள் ஒவ்வொரு நாளும் ஓடியிருக்கின்றேனென்றால் இந்தக் காலத்தவர்கள் நம்பமாட்டார்கள். திங்கட்கிழமை வந்தால் வியாழக்கிழமை திரும்பிச் செல்வோம். எல்லா வீடுகளிலும் மண்ணெண்ணெய் விளக்குகள்தான் எரியும். அதன் வெளிச்சத்தில்தான் வீடுகளில் இரவில் சிறுவர்கள் கல்விசார் விடயங்களை மேற்கொள்வார்கள்.

அப்போதைய துணைவேந்தர் காலஞ்சென்ற பேராசிரியர் துரைராஜாவின் முயற்சியால் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இரவுநேரத்தில் 10 மணிவரை மின்பிறப்பாக்கி மூலம் மின்சார வெளிச்ச வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழக மாணவர்கள் இதன் மூலம் மிகவும் நன்மை பெற்றிருந்தனர். இதற்குப் பொறுப்பாக மாணவர் நலன்கருதி நானும் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜாவும் செயற்பட்டோம்.




ஒன்றாகச் செயற்பட்டு வந்த வர்த்தகமும் முகாமைத்துவக் கற்கைகள் துறையும் தனித் தனித் துறைகளாகப் பிரிக்கப்பட்டன. விரிவுரையாளர்களும் விருப்பத்தின் பேரில் விரும்பிய துறைகளுக்குப் பிரிக்கப்பட்டனர். நான் முகாமைத்துவக் கற்கைகள் துறைக்குத் தலைவரா கவும் திரு. க. தேவராசா வர்த்தகத்துறைக்குத் தலைவராகவும் நியமிக்கப்பட்டோம்.

எவ்வாறாயினும், இரு துறைகளும் தொடர்ந்து கலைப் பீடத்திற்குக் கீழே தான் செயற்பட்டன. மாணவர்கள் அதிகளவிற்கு வர்தகத் துறைக்கும், முகாமைத்துவக் கற்கைகள் துறைக்கும் உள்வாங்கப்பட்டனர். இதன் விளைவாக விரிவுரையாளர்கள் தொகையும் அதிகரித்தது. அப்போதைய துணைவேந்தராக இருந்த பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளையின் முயற்சியால் புதியதொரு பீடம் (முகாமைத்துவக்கற்கைகள் மற்றும் வணிக பீடம்) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்டது.

துணைவேந்தர் தலைமை தாங்கிய 1999 முதல் ஆண்டு பேரவைக் கூட்டத்தில் நான் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தின் முதலாவது பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டேன். அன்றைய தினம் மதியம் நான் வெளிநாடு செல்வதற்கு ஆயத்தமானதால் திரு. க. தேவராசா பதில் பீடாதிபதியாக ஒரு மாதகாலம் கடமையாற்றினார்.


**பீடத்தின் ஆரம்பம்**

பீடம் ஆரம்பித்த பொழுது அந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஆரம்பித்த கல்வியாண்டுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். முகாமைத்துவக் கற்கைகள் துறையில் குறைவான மாணவர்களும் வர்த்தகத் துறைக்கு அதிக மாணவர்களும் கல்வி பயின்று வந்தார்கள். நான் வெளிநாட்டில் குறிப்பாக கனடா நாட்டில் மாணவர்களைச் சந்தித்த பொழுது தாங்கள் ஆங்கில மொழியில் கல்வியைக் கற்காதது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது எனக் கவலை தெரிவித்தனர். "இப்பொழுது நாளொன்றுக்கு 18 மணத்தியாலங்கள் ஆங்கிலம் கற்கின்றோம். நீங்கள் யாழப்பாணம் திரும்பியதும் ஆங்கில மொழியில் எங்களுடைய பாட்நெறியை மாற்றிக் கற்பிக்கவும், நாங்கள், நீங்கள் பலதடவை கூறியும் அதனைப் புறக்கணித்ததன் விளைவை அனுபவிக்கின்றோம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுக்கடைக்குள் இறங்கிவிட்ட தமிழ்த்தேசிய அரசியல்!



கந்தையா அருந்தவபாலன்

இலங்கை அரசியல் வரலாற்றில் இலங்கைத் தேசிய அரசியலுடன் இணைந்திருந்த தமிழ்த்தேசிய அரசியல் 1949 ஆண்டில் அதிலிருந்து விடுபட்டுத் தனித்துவமான பரிமாணம் ஒன்றைப் பெறத் தொடங்குவதை அவதானிக்க முடியும். அவ்வாண்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இணைந்து அமைச்சுப் பதவிகளையும் பெற்றிருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறி சமஷ்டி கோரிக்கையை முன்னிறுத்தி இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தொடங்கியதுடன் தமிழ்த்தேசிய சிந்தனை தனித்துவமாக கொழும்பு உட்பட வடக்கு, கிழக்கு மக்களிடையே வளரத் தொடங்குவதைக் காணமுடியும். பின்னர் 1975 இல் இவ்விரு கட்சிகளும் இணைந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாகத் தோற்றம் பெற்றபோது தமிழ்த் தேசியச் சிந்தனையானது அடுத்த கட்ட வளர்ச்சியை அடைந்து கொண்டது. அதுவரை இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வாகச் சமஷ்டியைக் கோரிவந்த தலைவர்கள் அதற்குப் பதிலாகத் தனிநாட்டுக் கோரிக்கை முன்வைத்தனர். இக்கோரிக்கையை 1977 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் அங்கீகரித்து அதுவரை இல்லாத வகையில் 18 உறுப்பினர்களைத் தெரிவு செய்ததுடன் நாடாளுமன்றத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு எதிர்க்கட்சி அந்தஸ்தையும் பெற்றுக் கொடுத்தது.

தலைவர்கள் தனிநாட்டுத் தீர்மானத்தை மக்கள் முன்வைத்து அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றபோதும் அதனை அடைவதற்கான திட்டங்களோ, வழிவரைபடங்களோ அவர்களிடம் இருக்கவில்லை என்பது மட்டுமன்றி அதன்பின்னர் அதற்கான காரியங்கள் எதிலுமே அவர்கள் ஈடுபட்டிருக்கவில்லை. நாடாளுமன்ற ஜனநாயகத்தினூடாக சமஷ்டியையே பெறமுடியாத போது அவ்வழியில் தனிநாட்டை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்? தமிழ்த் தலைவர்களின் தனிநாட்டுக் கோரிக்கை என்பது நாடாளுமன்றக் கதிரைகளைக் கைப்பற்றுவதற்கான ஒரு கோசமாகவே கையாளப்பட்டது என்பதே உண்மை. அதனை பின்னாளில் அவர்களின் அணுகுமுறைகள் வெளிப்படுத்தி நின்றன. தமிழர்களிடம் தனிநாட்டுக்கு அங்கீகாரம் கேட்டுப்பெற்ற அத்தலைவர்கள் சமஷ்டியையும் கைவிட்டு இறுதியில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பெறுவதற்கு ஆயத்தமானார்கள். அதுவே இறுதியில் அத்தலைவர்கள் சிலரின் உயிர்களுக்கும் உலைவைக்கக் காரணமானது. தலைவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை நாடாளுமன்றக் கதிரைகளுக்கான கோஷமாக முன்வைத்தாலும் அது மக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் தமிழ்த்தேசத்துக்காக பற்ற வைக்கப்பட்ட தீப்பொறியாக மாறியது. அது தமிழ்த் தேசிய சிந்தனையை



அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியது. ஆயுதப்போராட்டத்தின் உச்சநிலையே தமிழ்த் தேசியச் சிந்தனை வளர்ச்சியின் உச்ச நிலையாகவும் இருந்தது. ஆயுதப் போராட்டத்தினூடாக மட்டுமன்றி அதற்கிணையாக ஜனநாயக வழியிலான மக்கள் அங்கீகாரத்திலும் உச்சமாக அது வெளிப்படுத்தப்பட்டது. 2002 இல் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில், விடுதலைப்புலிகளின் வழிகாட்டுதலுடன், 2004 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அதியுச்சமாக 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

மிதவாத அரசியல் தலைவர்களாலும் பின்னர் தீவிரவாத அரசியல் தலைவர்களாலும் மக்கள் மத்தியில் கட்டி வளர்க்கப்பட்ட தமிழ்த் தேசியச் சிந்தனையை 2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து இன்றுவரை பல வழிகளிலும் மழுங்கடிக்கும் செயற்பாடுகளே அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதில் சிங்களத்தலைவர்களைவிட எமது தமிழ்த்தலைவர்களே முன்னிலையில் நிற்பது கண்கூடு. யுத்தம் முடிவுக்கு வந்தபின் அதனைப் பாதுகாத்து வளர்க்க வேண்டிய முழுப்பொறுப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் அதன் தலைவர்களிடமும் கையளிக்கப்பட்டிருந்து. ஆனால் அவர்கள் அதனை வளர்க்கவுமில்லை. பாதுகாக்கவுமில்லை. பதிலாக அதனை எவ்வளவு சிதைக்க முடியுமோ அவ்வளவுக்கு சிதைக்கும் கைங்கரியங்களிலே ஈடுபட்டனர். முன்னைய தலைவர்களால் கட்டிவளர்க்கப்பட்டு இன்றும் மக்கள் மனங்களில் ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருக்கும் அத்தமிழ்த் தேசிய உணர்வைத் தேர்தல் காலத்தில் மட்டும் தட்டியெழுப்பித் தமது கதிரைகளைத் தக்கவைக்கவே தற்போதைய தமிழ்த் தலைவர்கள் முனைகிறார்கள். அடுத்த நாடாளு மன்றத் தேர்தலுக்கு அந்தத் தேவையும் அத் தலைவர்களுக்கு இருக்காது போல் தெரிகிறது.

யுத்தத்திற்கு முன்னரான தேர்தல்களிலும்சரி யுத்தகாலத்தில் இடம்பெற்ற தேர்தல்களிலும்சரி அரசியல் மேடைகளில் பிரதான பேசுபொருளாக இருந்தவை தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பற்றிய விடயங்களே. தமிழரசுக் கட்சி, காங்கிரஸ் கட்சி என இரண்டு முகாம்கள் இருந்த காலத்தில் தமது எதிராளிகளை வெல்வதற்கு தமிழரசு அரசியல் உரிமைகளை முன்னிலைப் படுத்தியும் காங்கிரஸ் அபிவிருத்தியை முன்னிலைப் படுத்தியும் நாகரீகமான முறையிலேயே பரப்புரைகள் செய்தன.



ஆனால் இன்று தமது எதிராளிகளை வெல்வதற்கு மக்களிடம் முன்வைப்பதற்குத் தமிழ்த் தலைவர்களிடம் உருப் படியாக கொள்கைகளோ திட்டங்களோ இல்லாததால் அல்லது அவ்வாறு அவற்றை முன்வைத்தாலும் மக்கள் அதனை நம்பும் நிலையில் இல்லாததால் கீழ்த்தரமான பரப்புரைகளில் இறங்கி ஒருவர்க்கொருவர் சேறுபூசும் கைங் கரியங்களிலே ஈடுபடவேண்டிய கையறு நிலைக்கு தள்ளுப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அத்தகைய தொன்றே இன்று தேர்தல் பரப்புரைகளில் பிரதான பேசுபொருளாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மதுபான உரிமம் பற்றிய அவதாறு.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மதுபான உரிமம் தொடர்பான விடயம் தேர்தல் நோக்கத்துக்காக ஊதிப்பெருப்பிக்கப்பட்டுகிறது என்பதே உண்மை. இதற்கு முன்னரும் அரசுடன் ஒட்டியிருந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த உரிமத்தைப் பெற்றிருந்தும் அல்லது பெற்றுக் கொடுத்திருந்தபோதும் அதுபற்றி எங்கும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

> ❝ மதுபான உரிமத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதுவும் தம்மைத் தமிழ்த் தேசியவாதிகளாகக் காட்டி வாக்குச் சேகரிப்போர் விலகியிருக்க வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு. ஆனால் தம்மைத் தேசியவாதிகளாகக் காட்டி நாடாளுமன்றம் சென்ற பலர் ஆட்சியாளரிடம் விலைபோய் கனகாலம் கடந்துவிட்டது.

அதேபோல பெரும்பாலான உரிமங்கள் தென்பகுதிக்கு வழங்கப்பட்டிருந்தும் அங்கும் இது தொடர்பான பிரச்சினை எழவில்லை. வழமையாக அரச நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இந்த வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது. இதனால்தான் இலங்கையிலுள்ள மதுபான நிலையங்களில் பெரும்பாலானவை அரசியல் வாதிகளின் உறவினர் பெயரில் அல்லது அவர்களது பினாமி பெயர்களில் உள்ளன. ஓரிடத்தில் மதுபான விற்பனை நிலையம் அமைப்பதற்கான உரிமம் ஒன்றைப் பெறுவதற்கான சட்டத் தேவைப்பாடுகளில் ஒன்று அத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரின் ஒப்புதல் கடிதம் பெறப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும். இப்போது தொகுதி என்பது தேர்தல் மாவட்டமாக உள்ளது. வழமையாக மதுபான உரிமம் வழங்கப்படுவதில் நிதியமைச்சும் கலால் திணைக்களமும் பல்வேறு இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றி வந்தாலும் ஜனாதிபதித் தேர்தலைக் கருத்திற் கொண்டு நிதியமைச்சர் என்ற முறையில் ரணில் விக்ரமசிங்க ஒரேநேரத்தில் 170 க்கு மேற்பட்ட அனுமதிகளை வழங்கியுள்ளார். ஆயினும் தென்பகுதியில் இது தொடர்பாக எந்தப்பிரச்சினையும் இல்லை. அவற்றுடன் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நா.உ கள் தவிர மற்ற எல்லா தமிழ் உறுப்பினர்களும் ஏதோவொருவகையில் தொடர்புபட்டுள்ளனர் என்பதே உண்மை. புதிதாகக் களவெடுத்தவர்கள் இலகுவாகப் பிடிபட்டுக் கொண்டார்கள். கைதேர்ந்த கள்ளர்கள் இதுவரை தப்பியுள்ளனர். இதில் சுவாரஸ்யமான விடயம் என்னவெனில் இந்த விடயத்தைத் தேர்தல் துருப்புச்சீட்டாக அதிலும் தன் கட்சியிலுள்ள ஒருவருக்கெதிராகப் பயன்படுத்த முனைபவரும், அது தொடர்பான பட்டியலை வெளியிடவேண்டும் என்று புதிய ஜனாதிபதியிடம் கோரிக்கை வைத்தவராகச் சொல்லப்படுபவருமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரே இவ்வாறான ஒரு உரிமத்தைத் தனது ஆதரவாளருக்குப் பெற்றுக் கொடுத்துள்ளார் என்ற செய்தி. இவ்வாறான விடயங்களில் அவர் கைதேர்ந்தவர் என்பதுடன் இதனை மற்றவர்க்கெதிராகத் தேர்தலில் பயன்படுத்தலாம் என்ற நோக்கிலும் உரிமத்தை வழங்குபவரையும் பெறுபவரையும் நேரடியாக இணைத்துவிட்டு தப்பித்துக்கொண்டார் எனச் சொல்லப்படுகிறது. இதே நாடாளுமன்ற உறுப்பினர்தான் நாவற்குழியில் தேவாலயத்துக்கு அருகில் மதுபான விடுதிக்கு அனுமதி கொடுக்க மறுத்த பிரதேச செயலர்மீது அழுத்தத்தைக் கொடுத்ததுடன் அவரது இடமாற்றத்துக்கும் அது காரணமாக அமைந்தது.

பொதுவாழ்வில் ஈடுபடுபவர்கள் குறிப்பாக அரசியல் தலைவர்கள் தனி மனித ஒழுக்கத்தையும் கொண்டிருக்க வேண்டுமென்றே சமூகம் எதிர்பார்க்கிறது. அதிலும் போதைப் பொருட்களுடன் எந்தவகையிலும் தொடர்புபடுவதை சமூகம் ஏற்பதில்லை. இந்தவகையில் மதுபான உரிமத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதுவும் தம்மைத் தமிழ்த் தேசியவாதிகளாகக் காட்டி வாக்குச் சேகரிப்போர் விலகியிருக்க வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு. ஆனால் தம்மைத் தேசியவாதிகளாகக் காட்டி நாடாளுமன்றம் சென்ற பலர் ஆட்சியாளரிடம் விலைபோய் கனகாலம் கடந்துவிட்டது. மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றி அரசாங்கத்துடன் கதைத்தால் அவர்களின் உரிமைகளைப்பற்றிக் கதைக்க முடியாமல் போய்விடும் என்று திருவாய் மலர்ந்த முதுபெருந் தலைவர் சம்பந்தன் அரசாங்கத்திடம் பெற்ற வரப்பிரசாதங்களை தமிழ் மக்கள் நன்கு அறிவர். அதுபோல ஒவ்வொருவரும் ஆட்சியாளருடன் பல இரகசிய டீல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதே நிதர்சனம். அவற்றுள் சிலவே வெளியில் வருகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கும் ரணிலுக்கும் தமிழ் வாக்குகளை விற்பதற்காக அவர்களிடம் பெற்றுக் கொண்ட பலகோடிகளுக்கு யாராவது கணக்குக் காட்டுவார்களா? குறைந்தது தமது கட்சிக்கேனும் உண்மைக் கணக்குகளைக் காட்டுவதுண்டா? இதுதான் இன்றைய தமிழர் அரசியல் நிலை. தம்மை நல்லவராகக் காட்ட மற்றவரின் குறைகளை காட்ட முயற்சிக்கிறார்கள். ஆனால் எல்லாம் அவரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பது ஊரறியும். தம்மைத் தூய்மையானவராகக் காட்டி வருவோருள் ஒருவர்கூட ரணிலிடம் வாகனமொன்றுக்கு விண்ணப்பம் செய்துள்ளதாகவும் இன்னும் உறுதிப்படுத்தப்படாத செய்தியுமுண்டு. மலிந்தால் அதுவும் சந்தைக்கு வருந்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறன்ரோவில் நவராத்திரி விழா கொண்டாட்டம்

- குரு அரவிந்தன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒக்ரோபர் 13, 2024 அன்று ரொறன்ரோவில் கிராமத்து வதனம் தமிழ் பெண் கள் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நவராத் திரி விழா - 2024 சிறப்பாக நடைபெற்றது. திருமதி றஞ்சனி மகேந்திரராசா தலைமை தாங்கிய இந்த நிகழ் வில் ரொறன்ரோ பிரபல பல்வைத்தியர் சுமதி செல்வா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக Constituency officer Ms. Michelle Telfeyan, Councillor Vincent Crisanti, Mr. Dave Sound ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கிராமத்து வதனம் செயற்குழுவினரால் மங்கள விளக் கேற்றப்பட்டு, தமிழத்தாய் வாழ்த்து, கனடாப்பண், அமைதி வணக்கம் ஆகியன இடம் பெற்றன. திருமதி வேல்விழி அருள்மாறன் அவர்களின் மாணவிகளான செல்லி. லதிஸா தயாளன், செல்வி பைரவி அருள்மாறன், செல்வி. அபிநயா சிவதாஸ் ஆகியோரால் தமிழ்த்தாய் வாழ்த்து, கனடாப்பண் ஆகியன இசைக்கப்பெற்றன. தொடர்ந்து சரஸ்வதி பூசையுடன் நிகழ்வு ஆரம்பமா னது. ஆசிரியர் திருமதி விமலா புசுப்பநாதன் பூசையைக் கொண்டு நடத்தினார். செல்வி. அப்சரா சயந்தன், செல்வி. அர்ச்சயா வீரபத்திரஐயர் ஆகியோ ரால் சகலகலாவல்லிமாலை, திருப் புகழ் ஆகியன இசைக்கப் பெற்றன. இதைத் தொடர்ந்து திருமதி இள வரசி செந்தில்குமார் அவர்களின் வரவேற்புரையும், திருமதி கமல வதனா சுந்தா அவர்க ளின் ஸ்தா பகர் உரையும், திருமதி றஞ்சனி மகேந்திரராசா அவர்களின் தலைமை உரையும் இடம் பெற்றன.





அடுத்து கிராமத்து வதனம் காப்பாளர்களான பேராசிரியர் இ. பாலசுந்தரம், திரு. நவா கருணரட்ணராசா ஆகியோரது வாழ்த்துரைகளும், எழுத்தாளர் குரு அரவிந்தன், கவிஞர் அகணி சுரேஸ், திருமதி நாகேஸ்வரி சிறிகுமரகுரு, செல்வன் தருண் செல்வம், திரு. வி. என். மதியழகன் ஆகியோரது உரைகளும் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து 'விளக்கு வைப்போம்' என்ற கிராமத்து வதனப் பெண்களின் நடனமும், சிறுமிகளின் 'தீப நடனமும்' இடம் பெற்றன. அடுத்து தமிழ் மொழி பற்றி செல்வி அலேனா நிலாந்தன், செல்வி காசினி நிலாந்தன் ஆகியோரது உரை இடம் பெற்றது. செல்வி பிரவீனா செந்தூரன் செல்வி. அதீசா திலீபன் ஆகியோர் ஈழத்துப் பாடலுக்கு நடனமாடினர். தொடர்ந்து செல்வி பிரகதி குகானந்தசர்மாவின் வயலின் இசையும், பபீசா பிபீசனாவின் பியானோ இசையும் இடம் பெற்றன.

திருமதி சாந்தினி முத்துத்தம்பி அவர்களின் பாட்டைத் தொடர்ந்து திருமதி விமலாதேவி புசுப்பநாதனின் நன்றியுரை இடம் பெற்றது. திருமதி நவகீதா முருகண்டி அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். அரங்குநெறியாளராக செல்வி. பிரவீனா இராசையா பணியாற்றினார். விழாவிற்கு வருகை தந்தோருக்கு சிற்றுண்டி, தேனீர் வழங்கப்பட்டு, விழா இனிதே முடிவுற்றது.

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**கந்தையா முகுந்தன்
சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** அறுகம் குடா உட்பட நாட்டின் பல பகுதி களில் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட தகவல் இஸ்ரேலிய பிரஜை ஒருவரை மட்டுமே இலக்கு வைத்து நடத்தப்படவிருந்த தாக்குதல் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளபோதிலும் நாடுமுழுவதிலும் பாதுகாப்பு பலப்படுத்தபட்டுபட்டுள்ளதே. ஒருவரே இலக்குவைக் கப்பட்டார் என்றால் எதற்காக இப்படியெல்லாம் நடக் கின்றது?

**வியுக்தியார்:** நாடுமுழுவதும் பாதுகாப்பை பலப் படுத்தி முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லதுதானே. இதற்கு முன்னரும் இப்படியொரு தகவல் வந்தபோது அதனைக் கருத்தில் எடுக்காமல் இருந்ததால் நாடு அடைந்த பாதிப்பின் தாக்கம் இன்றுவரை தொடர்கின் றது அல்லவா. எனவே முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லதுதானே. இந்த எச்சரிக்கையை முதலில் அமெரிக்க - இஸ்ரேல்- பிரிட்டன் என்று பல நாடுகளின் புல னாய்வு தகவல்தான் வெளியே கொண்டுவந்தது. அதற்கு பின்னர் தான் நமது பொலிசார் இருவரை கைதுசெய் திருக்கின்றனர். அந்த இருவர் கொடுத்த தகவலின்படி தான் தாக்குதல் இலக்கு இஸ்ரேலியப் பிரஜை ஒருவர் தான் என்று தெரியவந்திருக்கின்றது. இந்த தகவல்தான் அமெரிக்க புலனாய்வுக்கும் கிடைத்ததா? அல்லது வேறு தகவல்கள் உண்டா என்பது தெரியவில்லையே. எனவே நமது பாதுகாப்பு படையினர் முன்னெச்சரிக்கை யாக இருப்பது நல்லதுதான்.

---

**இரா. ஜெயருபன், பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாணங் களை மையமாகக் கொண்டு டிஜிற்றல் வலயங்களை உருவாக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளாரே. புதிய அரசாங்கம் இப்படி வடக்கு கிழக்கைப்பற்றியும் யோசிப்பது மகிழ்ச் சிக்குரிதுதானே?

**வியுக்தியார்:** முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவும் யாழ்ப்பாணத்திற்கோ அல்லது மட்டக் களப்பிற்கோ வருகின்ற நாட்களில் எல்லாம் இந்த டிஜிட்டல் வலயங்கள் பற்றியும், தகவல் தொழில்நுட்ப திட்டங்கள் பற்றியும் கூறுவதற்கு தவறியதே இல்லை. இப்போது புதிய அரசாங்கமும் அதையே கூறியிருப்பது நல்லதுதான். புதிய அரசாங்கம் பழைய ரணில் அரசின் திட்டங்களை அப்படியே பின்பற்றுகின்றது என்று அண்மைக்காலமாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கூறிவருவதும் உண்மைதானோ என்றுதான் யோசிக்க வேண்டியிருக்கின்றது.

---

**எஸ். செந்துஜன், ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** எதிர்வரும் பொதுத்தேர்தலில் அரசியல் தீர்வு குறித்து தமிழ் மக்கள் தமது வாக்குகள் மூலம் வெளிப் படுத்தும் நிலைப்பாட்டுக்கு புறம்பாக தாம் ஒருபோதும் செயல்படமாட்டோம் என இலங்கைக்கான அமெரிக் கத் தூதுவர் ஜூலி சங், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் உறுதியளித்தார் என்று கூறப்படுகின்றதே. அப்படியெ னில் இந்தத் தேர்தலில் தேசியக்கட்சிகளுக்கு தமிழ் மக் கள் வாக்களித்தால், அதற்கு ஆதரவாகவே அமெரிக்கா வும் செயற்படும் என்றால், இதுவரை கால மும் நமது தமிழ் தேசியத் தலைவர்கள் நம்மைக் காப்பாற்ற சர்வதேசம் வரும் என்று சொன்னதெல்லாம் என்னவாகும்?

**வியுக்தியார்:** அதனால்தான் அமெரிக்க தூதுவரும் முன்னெச்சரிக்கையாக சொல்லியிருக்கிறார் என்று நினைக்கின்றேன். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தமிழ் தேசியக்கட்சிகள் எல்லாம் தத்தமக்குள் மோதிக் கொண்டு சின்னாபின்னப்பட்டு சிதறிப்போய் இருக்கின்றன. அத னால்தான் அவர் முன்னணியினருடனான சந்திப்பிலும் தமிழ் கட்சிகள் இப்படி பிரிந்து சிதறிப்போய் இருப்பது பற்றியும், அவற்றை ஒன்றிணைக்க முடியாதா என்றும் அவர்களிடம் கேட்டிருக்கிறாராம். அமெரிக்காவுக்கு தமிழர்கள் எல்லாம் ஒற்றுமையாக இருந்து தமது அரசியல் தேவைகளுக்காக குரல்கொடுக்கவேண்டும் என்பதில் இருக்கின்ற அக்கறை கூட, நமது கட்சிகளுக்கு இல்லை என்பது வேதனைக்குரியதுதான். அவரது இந்த எச்சரிக்கைக்கு பின்னராவது, தமிழ் மக்கள் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் உள்ள உண்மையான தேசியப் பற்றா ளர்களை இனம்கண்டு வாக்களிக்கவேண்டும்.

---

**இ. கோகுலன் குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** இலங்கையில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை இலக்கு வைத்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட லாம் என்ற பிரசாரத்தின் மூலம் இலங்கையில் சுற்றுலாத் துறையை சீர்குலைக்க சதி நடக்கிறதா என்பது குறித்து ஆராயவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பி னர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** இப்படித்தான், ஈஸ்டர் தாக்குதல் நடந்த பின்னரும் தாக்குதல்தாரிகள் தாம் யார் என்பதையும் எதற்காக தாக்குதல் நடத்தினோம் என்பதையும் தாக்கு தல் நடத்துவதற்கு முன்னரே வீடியோவாக எடுத்து வைத்துவிட்டுத்தான், தாக்குதல் நடாத்தினார்கள். தற் கொலைத் தாக்குதல்கள் மூலம் தாமும் மரணடைந்து விட்டனர். ஆனால் இப்போதும், தாக்குதல் நடாத்துவ தற்கு பின்னணியில் யாராவது இருந்தார்களா என்றும், அதனால் லாபமடைந்தவர்கள் பற்றியும் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபோலத்தான், என்ன நடந்தாலும் அதன் பின்னால் யாராவது இருக்கிறதா என்று நமது அரசியல்வாதிகள் ஆராயத் தொடங்கி விடுகின்றனர்.

---

**ஜி. கிருசாந்தன், டிக்கோயா, ஹட்டன்.**

**கேள்வி:** கிழக்கில் தமிழர்கள் தமிழர்களின் தேசிய இனப்பிரச்னையை கருத்தில்கொண்டு தமிழ் தேசியத் தைக்கொண்டு செயற்படும் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும் என கிழக்கு பல்கலைக் கழகத்தின் கலை கலா சார பீட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத் துள்ளதே?.

**வியுக்தியார்:** நல்ல கோரிக்கைதான். ஆனால் தமிழ் தேசியத்தைக் கொண்டு செயற்படும் கட்சிகளை எப்படி இனங்காண்பது என்பதையும் அல்லவா அவர்கள் சொல்லியிருக்கவேண்டும். யாழ்ப்பாணத்தில் இதுகால வரை சிறிலங்கா தேசியக்கட்சிகளில் போட்டியிட்டு எம்.பி.யாக இருக்கும் அங்கஜன் ராமநாதனும் தான் தான் உண்மையான தமிழ் தேசியவாதி என்றுதானே கூறுகின்றார். பல்கலைகக்ழக மாணவர்களே, தமிழ் தேசியக்கட்சிகளை இனம்கண்டு வெளிப்படுத்தலாமே.

---

**எஸ். கார்த்திகேசு திருக்கோவில், அம்பாறை.**

**கேள்வி:** இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக் கள் 80 சதவீதமான வாக்குகளை அளித்தால் இரு பிரதி நிதிகளை பெறலாம் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுன்ற முதன்மை வேட்பாளரும் முன்னால் பாராளுமன்ற உறுப் பினருமான சண்முகம் குகதாசன் தெரிவித்துள்ளாரே?

**வியுக்தியார்:** ஆனானப்பட்ட இரா. சம்பந்தன் போட்டியிட்டபோதே, ஒரு பிரதிநிதியைப் பெறுவதே கேள்விக்குரியதாக இருந்தது. இப்போது, இவரோ இரண்டு ஆசனங்களைப் பெறலாம் என்றும் அதற்காக எல்லோரும் இணைந்து வாக்களிக்கவேண்டும் என்றும் கேட்பது எதற்காக என்பதை புரிந்துகொள்ள முடிகின் றது. தான் முதலாவதாக - அதாவது மக்கள் விருப்பு வாக்கில் முதலாவதாக வரமாட்டார் என்பதால், இரண்டு ஆசனங்கள் கிடைத்தாலாவது எம்.பி.யாக ஆகலாம் என்று யோசிக்கிறார் போலும்.

---

**எஸ். நிதர்சன், மிருசுவில், சாவகச்சேரி.**

**கேள்வி:** கடந்த பதினைந்து ஆண்டு கால மக்கள் பணியில், என்று மில்லாதவாறு சதிகள், சூழ்ச்சிகள், சேறுபூசல்கள், பொய்ப் பிரசாரங்கள் என்பவற்றின் ஊடாக மக்கள் மத்தியில் எமக்கிருக்கும் செல்வாக்கை மதிப்பிழக்கச் செய்யும் வகையிலான செயல்பாடுகளைப் பலரும் முன்னெடுத்து வருகிறார்கள். எத்தகைய இடர் களும் தடைகளும் வந்தாலும் இதுவரை காலமும் தனி மனித அறம் வழுவாது ஆற்றிய பணிகளின் தடத்தில், இனியும் எனது அரசியற் களப்பணி தொடரும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** காய்க்கின்ற மரத்திற்குதான் கல் எறி படும் என்பது உண்மைதான். ஆனால் கல் எறிந்து விழுத் திய மாங்காயை கடித்த பின்னர்தானே அதன் சுவை தெரியவரும். தனக்கு கல் எறி விழுவதால் தான் காய்த்தி ருப்பதால்தான் கல் எறிகிறார்கள் என்பது சரிதான். அதற் காக பக்கத்தில் நிற்கும் மரத்திற்கு எறிகின்ற கல்லும் அல்லவா இவருக்கு விழுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடு :

# உக்ரைனின் வெற்றித் திட்டமும், அமெரிக்காவின் நிச்சயமற்ற ஆதரவும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

அமெரிக்க ஆதரவு எதிர்காலத்தில் தொடர்வது குறித்த நிச்சயமற்ற நிலையில் உக்ரேனிய ஜனாதிபதி தனது நாட்டின் வெற்றித் திட்டத்திற்கு ஆதரவைத் திரட்ட முயற்சித்துள்ளார்.


உக்ரைனின் வெற்றித் திட்டமானது ரஷ்யாவிற்கும் நேட்டோவிற்கும் இடையில் தீவிர மோதலுக்கு வழிவகுக்கும் என்று கிரெம்ளின் கூறியுள்ளது.

ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ் உக்ரைனுக்கு ஆதரவாக உள்ளார். ஆனால் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் எதிர் நிலையை பேணுகிறார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஹாரிஸுடன் மிகவும் இறுக்கமான போட்டியில் ட்ரம்ப் இருப்பதாக கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன. ஆயினும் அவருக்கு ஆதரவு மேலோங்கி வருகிறது.

அமெரிக்காவில் நவம்பர் தேர்தலின் பின்னர், உக்ரைனுக்கு நிச்சயமற்ற தன்மையை ஜெலென்ஸ்கி அறிந்திருக்கிறார். அதே வேளை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை பல முறை பாராட்டியுள்ளார்.

மேலும் அவர் ஜனவரி 2021 இல் பதவியில் இருந்து வெளியேறியதிலிருந்து குறைந்தது ஏழு முறை ரஷ்ய தலைவருடன் தொடர்பு கொண்டுபேசியதாக தெரிவிக்கப்படுகிறது.




NATO Secretary General Mark [illegible] (R) shakes hands with Ukraine's President

அத்துடன் தனது தேர்தல் பேரணிகளில், ட்ரம்ப் 24 மணி நேரத்திற்குள் உக்ரைன் போரை நிறுத்தி, சமாதான உடன்படிக்கையைப் பெற முடியும் என்று அடிக்கடி தற்பெருமையை காட்டி வருகிறார்.

இருப்பினும் அரசியல் விமர்சகர்கள் அத்தகைய நிலை வந்தால், உக்ரேனிய பிரதேசத்தின் பெரும்பகுதியை ரஷ்ய கைகளில் விட்டுவிட வேண்டும் என்றும் நம்புகிறார்கள்.

**ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாடு**

உக்ரைனின் வெற்றித் திட்டம் பற்றி, பிரஸ்ஸல்ஸில் நடந்த ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாட்டில் உக்ரைனின் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி பத்திரிகைகளுக்கு பகிர்ந்து கொண்டார்.

உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியின் "வெற்றித் திட்டம்" என்று அழைக்கப்படும் அவரது நாட்டைப் பாதுகாப்பது ரஷ்யாவிற்கும் நேட்டோவிற்கும் இடையே நேரடி மோதலுக்கு வழிவகுக்கும் என்று கிரெம்ளின் குற்றஞ்சாட்டி கூறியுள்ளது.

இந்தக் குற்றஞ்சாட்டை ரஷ்ய அரசு செய்தி நிறுவனமான டாஸ் முதலில் வெளியிட்டது. மேலும் ஜெலென்ஸ்கி தனது திட்டத்திற்கு ஆதரவைத் திரட்டும் முயற்சியில் பிரஸ்ஸல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தலைமையகம் சென்று பல உலக தலைவர்களை சந்தித்தார்.

**ரஷ்யா - நேட்டோ நேரடி மோதலா ?**

போரில் ரஷ்யாவுக்கு உதவ வட கொரியா ராணுவ வீரர்களை அனுப்புவதாக ஜெலென்ஸ்கி அண்மையில் குற்றம் சாட்டியுள்ளார். அதேவேளை உக்ரேனிய தலைவர் கிரீஸ் மற்றும் நோர்வே உட்பட பல ஐரோப்பிய நட்பு நாடுகளின் தலைவர்களுடன் பேசி, போர் விமான பைலட் பயிற்சி மற்றும் எரிசக்தி விநியோகங்களை பெற புதிய ஒப்பந்தங்களில் ஒப்புக்கொண்டுள்ளார்.

> பிரஸ்ஸல்ஸில் ஐரோப்பிய ஒன்றிய உச்சிமாநாடு, அக்டோபர் 17, 2024 அன்று உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி 'உக்ரைனின் வெற்றித் திட்டம்' பற்றி அறிவித்தார்

உக்ரைன் ஒரு ஜனநாயக நாடு, அது யூரோ-அட்லாண்டிக் பிராந்திய வாழ்க்கை முறையையும் பாதுகாக்க நேட்டோவில் இணைவதே முதன்மையான குறிக்கோளாக இருந்தது என்று ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

பல தசாப்தங்களாக உக்ரைன் நேட்டோவில் இல்லாததால் ஏற்பட்ட புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மையை ரஷ்யா பயன்படுத்தியது. இப்போது, நேட்டோவில் சேர உக்ரைனுக்கு உடனடி அழைப்பு விடுக்கப்பட்டது உறுதியானதாக இருக்கிறது.

ஜெலென்ஸ்கி வெற்றிக்கான தனது திட்டத்தை விவாதிக்க ஐரோப்பிய கவுன்சில் தலைவர் சார்லஸ் மைக்கேலையும் சந்தித்து நேட்டோ பொதுச்செய லாளர் மார்க் ரூட்டுடனும் பேசினார்.

**உக்ரைன் நேட்டோ உறுப்பினராகும்**

உக்ரேனிய தலைவருடன் ஒரு கூட்டு செய்தியாளர் கூட்டத்தில், நேட்டோ பொதுச்செயலாளர் மார்க் ரூட்டும் கலந்து கொண்டார். எதிர்காலத்தில் உக்ரைன் நேட்டோவில் உறுப்பினராக வருவதில் எந்த சந்தேகமும் இல்லை. அது நடக்கும் வரை உக்ரைன் இராணுவ வலிமையில் மேலோங்க வேண்டிய அனைத்தையும் நாங்கள் உறுதி செய் வோம்.

இந்த உயர்மட்ட நேட்டோ அதிகாரியின் வார்த்தைகள் ரஷ்யாவிடமிருந்து உடனடி கண்டன எச்சரிக்கையை பெற்றது. ரஷ்யாவிற்கும் நேட்டோவிற்கும் இடையே நேரடி மோதலின் அபாயத்துடன் ஜெலென்ஸ்கியின் திட்டம் மேலும் தீவிரமடைய வழிவகுக்கும் என்று கிரெம்ளின் அரசு தெரிவித்துள்ளது.

உக்ரைனின் மேற்கத்திய நட்பு நாடுகள், ரஷ்யாவின் படையெடுப்பிற்கு எதிராக உக்ரைன் தொடர்ந்து போராட ஆதரிக்கும் என்று ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

**கிரீஸ் எவ்-16 விமானிகள் பயிற்சி**

சமாதான உச்சி மாநாட்டை முன்னெடுத்துச் செல்ல உக்ரைன் திட்டமிட்டுள்ளது. அதேவேளை கு-16 போர் ஜெட் விமானிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், கிரேக்கத்துடன் புதிய ஒப்பந்தத்தை கையெழுத்திட்டு அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பின் தொடக்கத்திலிருந்து, கிரீஸ் உக்ரைனுக்கு இராணுவ ஆதரவை வழங்குகிறது. இதில் இராணுவ பொருள் மற்றும் தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சியையும் வழங்குகிறது.


உக்ரைனின் மிக அவசரமான பாதுகாப்புத் தேவைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற கிரீஸ் தயாராக உள்ளது என்று உக்ரைன் தலைவர் கூறியுள்ளார். கிரீஸ் அரசு விமானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு கு-16 பயிற்சியை துரிதப்படுத்தி கூடுதல் ஆதாரங்களை வழங்க உள்ளது.

இத் திட்டம் மூலம் வெற்றியைப் பெற முடியும் என்று தான் நம்பும் விவரங்களை ஜெலென்ஸ்கி உக்ரேனிய பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது அறிவித்தார்.

**அடுத்த ஆண்டு போர் முடிவுறும் ?**


இந்தத் திட்டம் ஐந்து பகுதிகளைக் கொண்டதுடன், உக்ரைன் நேட்டோவில் இணைவதற்கான ஒரு விரைவான செயல்முறைக்கான திட்டம் இந்த முன்மொழிவின் மையத்தில் உள்ளது.

வெற்றித் திட்டத்தை இப்போது செயல்படுத்தத் தொடங்கினால், அடுத்த ஆண்டுக்குள் போரை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்றும் ஜெலென்ஸ்கி உக்ரேனிய பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது அறிவித்தார்.



ஆயினும் ஐரோப்பிய நட்பு நாடுகளுடன் கடந்த வாரம் நடந்த தொடர் கூட்டங்களில் கணிசமான புதிய ஆதரவைப் பெற ஜெலென்ஸ்கி தவறியதாக கருதப்படுகிறது.

அதன் பின்னர் அவர் தனது தந்திரோபாயங்களை மாற்றி அறிவித்தார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ ஆகிய இரண்டிலும் உறுப்பினராக உக்ரைனை அதன் பாதையில் மேற்கு நாடுகள் ஆதரிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூன்று பேர் பணி இடைநீக்கம்

கொழும்பு, ஒக். 27

கொழும்பு, பமுனுகம பிரதேசத்தில் இளைஞர்கள் இருவரை தாக்கியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பமுனுகம பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களை பொலிஸ் அதிகாரிகள் கொடூரமான முறையில் தாக்கியதாக குற்றம் சுமத்தி நேற்று முன்தினம் பிற்பகல் போபிட்டி பமுனுகம பொலிஸ் நிலையம் முன்பாக கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, போபிட்டி பமுனுகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நுழைந்து தங்க நகையை திருடியதாக சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (எ)

# 'பல்லவம்' இதழ் - 6 வெளியீடு



கிளிநொச்சி, ஒக். 27

பூநகரி பிரதேச சபையின் பல்லவராயன்கட்டு பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு மாத நிகழ்வு நடைபெற்றது.

பல்லவராயன்கட்டு பொதுநூலகத்தில் பூநகரி பிரேதச சபையின் செயலாளர் இ. தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் "பல்லவம்" இதழ் - 6 ஐ செயலாளர் வெளியிட்டு வைக்க முழங்காவில் மகா வித்தியாலய உதவி அதிபர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி பெற்றுக்கொண்டார்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ஐ)

# வீடொன்றின்மீது துப்பாக்கிச் சூடு!

இரத்தினபுரி, ஒக். 27

இரத்தினபுரி, மாரபன பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றது.

இதன்போது, இந்த வீட்டினுள் ஒரு பிள்ளை மற்றும் பெற்றோர் உட்பட ஐந்து பேர் இருந்த நிலையில் அவர்களுக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் கூறினர்.

முன்விரோதம் காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பாராளுமன்றத் தேர்தலில்....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல்தனமான அரசியல் கலாசாரத்தைக் கட்டிவளர்த்தவர்களை ஜனநாயக தேர்தல் செயன்முறைகளின் மூலமாக நிராகரிப்பதற்கு முன்னதாக வீதிகளில் இறங்கிக் கிளர்ச்சி செய்வதன் மூலமாகவும் அதிகாரத்தில் இருந்து தங்களால் விரட்ட முடியும் என்று நிரூபித்தவர்கள் இலங்கை மக்கள். அதேவேளை, இலங்கை வரலாறு முன்னென்றும் கண்டிராத வகையிலான மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு தங்களது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு கிடைத்த முதல் வாய்ப்பைப் பயன்படுத்தி அமைதியான தேர்தலில் சுமுகமான அதிகார மாற்றத்தையும் உறுதி செய்தவர்கள் அவர்கள்.

அதேவேளை, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மூன்று தசாப்த கால இவைளியில் இரு ஆயுதக்கிளர்ச்சிகளை முன்னெடுத்த ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) கடந்தகால வன்முறைக்கு அதை நெடுகவும் பணயக் கைதியாக வைத்திருக்காமல் அதன் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை ஜனநாயக தேர்தல் மூலம் மக்கள் ஆட்சியதிகாரத்துக்கு கொண்டுவந்திருக்கிறார்கள். நம்பகத்தன்மையான ஒரு ஜனநாயக இயக்கமாக தேசிய மக்கள் சக்தியை நோக்கியதளாலேயே இன்று அதன் தலைவரான திசாநாயக்கவை மக்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியில் அமர்த்தியிருக்கிறார்கள்.

பலம்பொருந்திய அரசாங்கம் ஒன்று மாத்திரமே இன்றைய தேவை என்றும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தேவையில்லை என்றும் ஜனாதிபதியும் அமைச்சர் ஹேரத்தும் கூறியிருக்கும் கருத்துக்கள் பாராளுமன்ற ஜனநாயக அரசியல் மீதான அவர்களின் பற்றுறுதி மீது மக்களுக்கு நிச்சயம் சந்தேகத்தை ஏற்படுத்தும்.

பாராளுமன்றத்தை துப்புரவு செய்வது என்பது ஊழல்தனமான அரசியல் வர்க்கத்தை ஜனநாயக ரீதியாகத் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புவது என்று மாத்திரம் அமைய வேண்டுமே தவிர , பாராளுமன்றத்தில் எதிரணியே இருக்கத் தேவையில்லை என்று ஒருபோதும் ஆகிவிடாது. ஜனாதிபதியும் அமைச்சரும் தெரிவித்த கருத்துக்கள் 47 வருடங்களுக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி மகத்தான வெற்றி பெற்றபோது தேர்தல் வரைபடைத்தை சுருட்டி வைப்பது குறித்து ஜே.ஆர். ஜெயவர்தன பேசியதை தவிர்க்க முடியாமல் நினைவுபடுத்துகிறது.

# முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த சந்ததிக்கு ஆங்கிலத்தில் கற்பித்து நல்ல எதிர்காலத்தை உருவாக்குங்கள்" என ஒருமித்த குரலில் கேட்டுக் கொண்டார்கள்.

1999 ஆவணி மாதம் நான் யாழ்ப்பாணம் திரும்பி வந்ததும் பல்கலைக்கழக மூதவைக்கு என்னுடைய ஆதங்கத்தைப் பீடத்தின் அனுமதியுடன் ஆங்கில மொழியில் கற்பிக்கப்போகின்றோம் எனக்கூறி அங்கீகாரத்தைப் பெற்றோம். சகல பீடாதிபதிகளும் பேராசிரியர்களும் வாழ்த்துத் தெரிவித்தனர். இருந்தாலும், பல்வேறு வகையான எதிர்ப்புக்களையும் நான் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது.

ஆசிரியர்கள் மௌனமாக இருந்தார்கள் எதிர்காலம் எவ்வாறிருக்குமென அவர்ளுக்கு விளங்கும். மாணவர்கள் மத்தியில் பெரும் சஞ்சலம் ஏற்பட்டது. பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலத்தில் முற்றாகப் படிக்க முடியாத சூழலில் இருந்தார்கள் : அத்தகையவர்கள் கவலையடைந்தனர். வெகுவிரைவில் நீங்கள் சுடப்படுவிர்கள் என்று ஒரு கடிதமும் என் கைக்கு வந்தது.

அந்த நேரத்தில் நான் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பீடம் சார்ந்த முதல் கூட்டத்திற்கு சென்ற பொழுது, ஆங்கில மொழிமூலக் கற்பித்தலுக்கு பெரும் வரவேற்புக் கிடைத்தது. எமது பீடத்தை ஒரு உதாரணமாகக் கொண்டு சகல பல்கலைக்கழகங்களிலும் ஆங்கில மொழிமூல கற்பித்தலுக்கு மாறுமாறு தீர்மானம் எடுக்கப்பட்டது. எமது பீடத்தின் தூரநோக்கு பலராலும் பாராட்டப்பட்டது. ஆயினும், மாணவர்கள் மத்தியில் பெரும் பய உணர்வு இருப்பதைக் காண முடிந்தது. இதனாலேற்படும் நன்மைகள் பற்றித் தொடர்ச்சியாக விளக்கம் கொடுத்து வந்தோம் மீண்டுமொரு மாற்றத்தைக் கொண்டு வந்து மாணவர்களை சாந்தப்படுத்தினேன்.

முதலாவது ஆண்டில் இருமொழிக் கற்பித்தலுக்கான அங்கீகாரத்தை மூதவையிடம் பெற்று ஆங்கிலத்திலும் தமிழிலும் விடைகள் எழுதலாமெனவும் அல்லது இரு மொழிகளையும் கலந்து விடைகள் எழுத சந்தர்ப்பம் வழங்கினோம். நான் பீடாதிபதியாக இருந்த ஆறு வருடங்களும், முதலாம் ஆண்டுக்கு முகாமைத்து வம், வங்கியியல் பாடங்களை ஆங்கிலத்தில் இலகு நடையில் கற்பித்து, தமிழ்மொழி மூலம் விளக்கமளித்ததன் மூலம் அவர்களுக்கு நம்பிக்கையை உருவாக்கினேன்.

மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்று உள்ளே வருவதற்கு முன்பே ஆங்கிலத்தைக் கற்கத் தொடங்கினார்கள். இதனால் நாம் வெற்றியடைந்து விட்டோம். ஆங்கில மொழி மூலம் கற்றவர்களுக்கு வெளிநாடு செல்வதற்கா ஐ.ஈ.எல்.ரீ.எஸ் பரீட்சையிலிருந்து விதிவலக்கு கிடைத்ததால் பலர் பரீட்சை முடிவுகள் வந்ததும், இங்கிலாந்து நாட்டிற்கு சென்று எம்.பீ.ஏ மேற்படிப்புகளைத் மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. இதனால் பலர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி விட்டனர்.

ஆங்கில மொழிமூலக் கற்பித்தல் நடைமுறையிலிருந்த பொழுது மறக்கமுடியாத சில சம்பவங்களில் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன். முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் ஆங்கிலத்தில் படிக்க முடியாதெனக் கல்வியை இடைநிறுத்திச் சொந்த ஊருக்குப் போகப் கோகின்றேன் எனக் கவலையுடன் என்னுடன் கலந்து ரையாடினார். அடுத்த நாள் என்னைக் கண்டதும் ஆங்கி லத்தில் 'குட்மோர்னிங் சேர்' என்றார். நான் அவரை அழைத்து 'காலை வந்தனம்' எனச் சொன்னேன். "ஆங்கி லம் கடினம் என்று கூறிப் படிப்பை நிறுத்தப் போகின் றேன் என நீர் நேற்றுக் கூறியது ஞாபகமிருக்கின்றது" என்றேன்.

ஆவர் அப்பொழுது தான் உண்மையைக் கூறமுயன்றார். "நான் ஆங்கிலத்தில் கொஞ்சம் எழுதக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் சகமாணவர்கள் எனது விடையைப் பார்த்தால் பகிடி பண்ணுவார்கள் என்றார். ஒருவருடைய விடைத்தாளை இன்னொருவர் பார்க்க முடியாது, விரிவுரையாளருக்கு மட்டுமே தெரியுமெனக் கூறினேன். அத்துடன் அவர் மனநிலை மாறி ஆங்கிலத் தில் படித்து தற்போது நல்லதொரு தொழிலில் இருக்கின்றார்.

சாவகச்சேரியில் கார் வாடகைக்கு விடும் ஒருவர் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு எனது வீட்டிற்கு வந்தார். முதலாவது ஆண்டில் முகாமைத்துவக் கற்கைகள் துறையில் கல்வி பயிலும் அவர் ஆங்கில மொழி மூலக் கல்வி கடினமாக இருப்பதாகவும், கல்வியைக் கைவிடுவதற்குத் தீர்மானித்து விட்டதாகவும் கவலை யுடன் கூறினார். உளரீதியாகப் பயப்படுகின்றாரென பிள்ளையுடன் கதைக்கும் பொழுது அறிந்து கொண்டேன்.

அடுத்த கிழமை தொடக்கம் விரிவுரைகளுக்கு முன்வரிசையில் இருக்குமாறு புத்திமதி கூறினேன். பிள்ளையும் அவ்வாறே செய்யத் தொடங்கியது. படிப்படியாகப் பிள்ளையிடம் முன்னேற்றத்தை அவதானித்தேன். பின்வரிசைகளில் இருப்பவர்களில் பலர் என்னைத் திட்டித் தீர்ப்பார்களாம். இதனால் இந்தப் பிள்ளைக்கும் பயம் ஏற்பட்டு நாங்கள் எல்லோரும் பரீட்சையில் சித்தியடைய மாட்டோம் என்ற எண்ணம் பிள்ளையை நிலைகுலையச் செய்தது. அந்தப் பிள்ளை தொடர்ந்து நன்றாகப் படித்து இரண்டாம் வகுப்பு மேற்தரத்தில் சித்தியடைந்தது.

படிப்படியாக மாணவர்கள் மத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டு ஆங்கில மொழியிலேயே கற்கத் தொடங்கிவிட்டனர். வெளிநாட்டில் மாத்திரமன்றி உள்நாட்டிலும் பல துறைகளிலும் வேலை வாய்ப்பினைப் பெறக் கூடிய அளவுக்கு தமது அறிவை வளர்த்துக் கொண்டனர். குறிப்பாக நிர்வாகத்துறை, வங்கித்துறை, கணக்காளர், கணக்காய்வாரள்கள், திட்டமிடல் துறை, ஆசிரியர்கள், குறிப்பாக அரசசார்பற்ற நிறுவனங்களில் நல்ல உயர் பதவிகளில் இருக்கின்றனர். வேலை செய்கின்ற சகல துறைகளிலும் சிறப்பாக இயங்கி வருகின்றார்கள்.

கனடா, இங்கிலாந்து நாடுகளுக்கு மீண்டும் 2007ஆம் ஆண்டு சென்ற பொழுது தற்செயலாக ஒரு உணவகத்தில் ஒரு மாணவனைச் சந்தித்தேன். கனடாவிலுள்ள பிரபல்யமான வங்கியில் உயர் அதிகாரியாக இருப்பதாகக் கூறி ஆங்கில மொழிமூலம் கல்வி கற்றதே என்னை இந்த நிலைக்குத் தன்னைக் கொண்டு சென்றதெனக் கண்ணீர் மல்கக் கூறி, அடுத்தநாள் நானிருக்குமிடத்துக்கு வந்து என்னை மதிய உணவுக்கு அழைத்துச் சென்றார். அங்கு வேறு சில மாணவர்களும் வந்திருந்தார்கள். அவருடைய மனைவி நீங்கள் தானே 'நடா சேர்'? என்று கேட்டார்.

தங்களுடைய வீட்டில் பல மாணவர்கள் ஒன்று கூடுவது வழக்கம். அப்பொழுது 'நடா சேர்' ஆங்கில மொழி மூல கற்கை முறையை அறிமுகப்படுத்திய பொழுது நாங்கள் எங்கள் அறையிலிருந்து எப்படியெல்லாம் அவரைத் திட்டித் தீர்த்தோம், ஆனால் இன்று நாங்கள் நல்ல நிலையிலிருப்பதற்கு அவருடைய தூரநோக்கும், எதிர்கால சவால்களும் உலக அரங்கில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணரச் செயதவர் என வாழ்த்துவார்கள் என்று அவருடைய மனைவி கூறினார்.

எங்கள் பல்கலைக்கழகத்தில் எமது பீடத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகளில் பலர் வெளிநாடுகளில் இலகுவாக ஆங்கில மொழி மூலம் கலாநிதிப் பட்டங்களைப் பெற்று எங்கள் பல்கலைக்கழகத்திற்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். பலர் பேராசிரியர்களாகப் பதவியுயர்த்தப்பட்டு ஒவ்வொரு துறையிலும் இருக்கின்றார்கள். குறிப்பாக மூவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் பேராசிரியர்களாக இருக்கின்றார்கள். வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலும், இத்துறைகளில் பேராசிரியர்களாக இருக்கின்றார்கள். எம்முடைய பீடத்திலிருந்து வெளியேறிய பலர் வவுனியாப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் (மட்டக்களப்பு), தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (ஓலுவில்) போன்றவற்றில் பேராசிரியர்களாக இருக்கின்றார்கள். எமது பீடம் பல இன்னல்களுக்கு மத்தியில் வளர்ந்து இன்று இலங்கையில் ஒரு உயர் பீடமாகப் பலராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது முக்கிய அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை...

அத்துடன், அனுராதபுரத்துக்கும் பெலியத்தவுக்கும் இடையிலான ராஜரட்டை ரெஜின ரயில் சேவையும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு ரயில் மார்க்கத்தில் முன்னெடுக்கப்படும் திருத்தப் பணிகள் காரணமாக கொழும்பு-கோட்டையிலிருந்து மஹவ வரை மாத்திரமே தற்போது ரயில் சேவை முன்னெடுக்கப்படுகிறது. (அ)

## தமிழ்மக்கள்...

முச்சக்கர வண்டியில் வந்த நால்வர் அடங்கிய குழு ஒன்று அவர்கள் மீது தாக்குதல் நடத்தியது. அவர்கள் அந்தத் தாக்குதலை எதிர்த்தனர்.

இந்நிலையில் திரும்பிச் சென்ற குழு சுமார் 30 பேர் அடங்கிய குழுவினரை அழைத்து வந்து அங்கு பிரசாரத்தில் ஈடுபட்ட பெண்கள் மற்றும் ஆண்கள் மீது மீண்டும் மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டது.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த ஒரு பெண் உட்பட மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த பெண் அதிதீவிர சிகிச்சை பிரிவிலும் ஏனைய இருவரும் 24 ஆம் இலக்க விடுதியிலும் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார். (அ)

## அறுகம்குடா...

வேண்டாம் என இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் கடந்த புதன் கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த எச்சரிக்கையை தொடர்ந்து பல ஐரோப்பிய நாடுகள் தமது பிரஜை களை அறுகம்குடாவுக்குச் செல்ல வேண்டாமென தடை விதித்திருந்தன.

இந்த நிலையில், பொலிஸாரார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினர் இணைந்து இங்கு பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

இங்கு இஸ்ரேலிய பிரஜைகளை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்த திட்டமிட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு கூறியிருந்தது. இது தொடர்பில் பயங்கரவாத விசாரணை பிரிவினர் மூன்று சந்தேக நபர்களை கைது செய்ததுடன், சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு பொலிஸார் தடுப்பு காவல் உத்தரவினை பெற்றுள்ளனர்.

அறுகம்குடாவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு அன்றாடச் செயல்பாடுகள் மற்றும் சுற்றுலாச் செயல்பாடுகள் வழமைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதால் தற்போது வழமை போன்று சுற்றுலாப் பயணிகளுக்கான ஹோட்டல்கள் சேவைகள் இடம்பெறுவதுடன், இங்கு வசிக்கும் மக்களின் வாழ்க்கையும் இயல்பு நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இஸ்ரேலியர்கள் தங்கியுள்ள சுற்றுலா விடுதிகளுக்கு பொலிஸார் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர். விடுதிகளில் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகள் குறித்த தினசரி அறிக்கைகளை பொலிஸார் திரட்டி வருவதுடன், சுற்றுலா விடுதிகளில் இஸ்ரேலியர்கள் தங்கியிருந்தால் அவ்விடுதிகளுக்கு சிறப்பு பாதுகாப்பும் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

"கடந்த இரண்டு நாட்களாக தமது தொழில்துறை கடுமையான சவாலை எதிர்கொண்டிருந்தது. நீண்டகாலம் தாம் எந்த சவால்களை எதிர்நோக்க நேரிடும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தற்போது நிலைமை சீராகியுள்ளதுடன், சுற்றுலாப் பயணிகளின் வருகையும் இடம்பெறுகிறது." என ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

## வீட்டு...

வியாழக்கிழமை இரவு ஒட்டிய போது வீட்டின் முன்பாக அமைத்திருந்த யானை வேலியின் மின்சாரம் தாக்கியுள்ளது.

மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் ஆராய சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் வீதியோரம் அமைக்கப்பட்டிருந்த யானை வேலியைப் பார்வையிட்ட பின்னர் வீட்டின் உரிமையாளரைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார். (அ)

## அறுகம்குடா தாக்கு...

இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்ட சம்பவத்தின் மூளையாக செயற்பட்டவர் கொழும்பைச் சேர்ந்த போதைப்பொருள் வியாபாரி என பயங்கரவாத புலனாய்வு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

மேலும் ஒருவர் கைது செய்யப்பட்ட தமிழ் நபருக்கும் மாலைதீவு குடிமகனுக்கும் தொலைபேசியில் அழைப்பு விடுத்துள்ளதுடன், பயங்கரவாத தாக்குதல். தொடர்பில் போதைப்பொருள் கடத்தல் காரனிடம் ஏதாவது உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்தேக நபர்கள் கடத்தல் காரரை சந்தித்தார்களா என்பது இது வரை உறுதி செய்யப்படவில்லை. அது மட்டுமின்றி, தொடர்புடைய கடத்தல் காரரும் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த திட்டமிட்ட தாக்குதலின்படி, இஸ்ரேலியர்கள் அதிகம் நடமாடும் இடத்துக்கு சென்று கத்தியால் குத்துவது போன்ற காயங்களை ஏற்படுத்துவதே திட்டமாக இருந்தது. இந்தத் திட்டத்தின் பின்னணியில் உள்ள அனைவரும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் மற்றும் உளவுத்துறை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

லெபனான் மற்றும் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் தாக்குதல் மற்றும் காசா பகுதியை அழித்தது மற்றும் ஹிஸ்புல்லா தலைவரின் படுகொலை ஆகியவை இந்த தாக்குதலைத் திட்டமிடுவதற்கான முக்கிய காரணம்.

எனினும், எமது நாட்டுக்கு வருகை தரும் இஸ்ரேலியர்களுக்கு தெரியாமல் இருக்க உளவுத்துறையினர் அவர்களை பின்தொடர்ந்து செல்ல முடிவு செய்துள்ளனர். இரண்டு வாரங்களாக இந்த பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளபடி, இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் எமது நாட்டுக்கு வருகை வந்த இஸ்ரேலிய குடிமக்களின் எண்ணிக்கை 20,515 ஆகும். மேலும், 43,678 அமெரிக்கர்கள் உள்ளனர். 134,464 பிரித்தானியர்களும் உள்ளனர்.

அறுகம்குடா கடற்கரையில் அலைச் சறுக்கல் செய்வதற்கு இந்த காலகட்டம் சரியான நேரம் என்று கூறப்படுகிறது. எனவே ஏராளமான இஸ்ரேலியர்கள் வருகை தருவார்கள். அந்த நேரத்தில், அவர்கள் அந்தப் பகுதியில் அவர்கள் உருவாக்கிய ஹீப்ரு மத இடங்களில் மத விழாக்கள் மற்றும் அணிவகுப்புகளிலும் பங்கேற்பார்கள். எனவே, அவர்கள் அவ்வாறு பயணிப்பதனை தடுத்து நிறுத்துமாறு கூறப்பட்டுள்ளது.

இது தவிர மாத்தறை, வெலிகம, காலி, ஹிக்கடுவ, நீர்கொழும்பு, எல்ல போன்ற பிரதேசங்களிலும் பொலிஸ் சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# எதிர்வரும் ஜனவரியில் உள்ளூராட்சித் தேர்தல்!

கொழும்பு, ஒக். 27

எதிர்வரும் ஜனவரி மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தின் இரண்டாம் வாரத்தில் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

2023 ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்தத் திட்டமிட்டிருந்த போதும், அதற்கு உரிய பணம் ஒதுக்கப்படவில்லை என்று கூறி தேர்தலை அரசு ஒத்திவைத்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக ஏற்கனவே 131 மில்லியன் ரூபா (சுமார் 13 கோடி ரூபா) செலவிடப்பட்டிருந்தது. மார்ச் 19, 2023 அன்று, அதுவரை செயற்பட்டு வந்த 331 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்தது. அந்த உள்ளூராட்சி சபைகள் தற்போது சிறப்பு ஆணையாளரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

இதனையடுத்து, இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றை பரிசீலித்த உயர் நீதிமன்றம், உள்ளூராட்சி சபைத் தேர்தலை விரைவில் நடத்த தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட்டது.

இதன்படி அடுத்த வருடம் ஜனவரி மாத இறுதிப் பகுதியில் 20 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 275 உள்ளூராராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் உடனடியாக ஆரம்பிக்கப்படும் எனத் தெரியவருகிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# யாழ். பல்கலை மாணவர் ஒன்றியத்தின் புதிய செயலாளருக்கு பலத்த எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளராக சட்டவிரோதமான முறையில் புதிதாகப் பதவியேற்றவருக்கு பலத்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளதோடு பல்கலைக்கழக மட்டத்தில் விசாரணைகளும் ஆரம்பமாகியுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளராக இதுவரை காலமும் பதவிவகித்தவர் தனது கற்கைகளை முடித்து வெளியேறிய நிலையில் அவருடைய பதவிக்கு முன்னைய ஒன்றியத்தின் நிர்வாகக் குழுவில் அங்கம் வகித்த ஒருவர் யாப்பு விதிகளுக்கு முரணாக புதிதாக பதவியேற்றுள்ளார்.

இதனால் புதிய கலைப்பீட மாணவர் ஒன்றியத்துக்கான பிரதிநித்துவம் தடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக கலைப்பீட மாணவர் ஒன்றியம் மற்றும் விரிவுரையாளர்கள் எதிர்ப்புகளை வெளியிட்டுள்ளனர்.

சட்டவிரோதமான பதவியேற்பு தொடர்பான விசாரணைகளை உடன் மேற்கொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினரால் கோரிக்கை கடிதமொன்றும் துணைவேந்தரிடமும் மாணவர் நலச்சேவை அலுவலகத்திடமும் கையளிக்கப்பட்டது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதான மாணவர் ஒன்றியச் செயலாளர் பதவி வகிக்கும் நிலையில் முன்னைய ஒன்றியத்தின் காலம் நிறைவடைந்த நிலையில் வறிதாக்கப்பட்ட செயலாளர் பதவிக்கு கலைப்பீட மாணவர் ஒன்றியத்தில் அங்கம் வகிக்காத ஒருவர் புதிதாக பிரதான மாணவர் ஒன்றியச் செயலாளர் பதவியை கைப்பற்றியமை யாப்பு விதிமுறைகளுக்கு சட்டவிரோதமானது என யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க வட்டாரங்கள் எதிர்ப்பு வெளியிட் டுள்ளன. (அ)

## இந்தியாவை...

விடுத்துள்ள செய்தி ஒன்று கடந்த வாரம் வெளியாகி இருந்தது. அரசின் இந்த அழைப்புக்கு பல தரப்பில் இருந்தும் விமர்சனங்கள் வந்தன.

இதன்படி, அண்டை நாடான இந்தியாவை மறந்துவிட்டு கியூபா பிரதமரை நாட்டுக்கு வருகை தருமாறு தற்போதைய அரசாங்கம் முதலில் அழைப்பு விடுத்ததாகவும், இது ஒரு அவநம்பிக்கையான பாதை எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற வேட்பாளர் நளின் பண்டார குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்த அரசாங்கம் தனது முதல் அதிகாரபூர்வ அழைப்பை வெளிநாட்டின் தலைவருக்கு வழங்கியதாக நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அதாவது, கியூபா பிரதமருக்கு. இது மிகவும் வேடிக்கையான விடயம். கியூபாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார உறவு என்ன? சமூக தொடர்பு என்ன? அப்படி ஒரு விடயத்தை நாம் இங்கே காணவில்லை.

கியூபாவின் பொருளாதாரம் எங்கே? கியூபா ஒரு உடைந்த நாடு. பிடல் காஸ்ட்ரோவால் இவர்கள் கியூபாவின் ஹீரோக்களாக மாற முடியும். ஆனால், கியூபா என்ற நாட்டோடு நாம் உறவு வைத்திருப்பதால் எமக்கு மதிப்பு இல்லை.

துக்கம் மற்றும் செழிப்பு இருந்த காலங்களில் எம்மோடு இருந்த நாடு இந்தியா. எப்போதுமே நமது அண்டை நாடாகவும், எமது நண்பனாக நன்மை செய்யும் நாடாக இருந்தது என்று அவர் தெரிவித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாராளுமன்ற...

ஆலோசனைக்கு பின்னர் தேர்தல் திகதி குறித்த அறிவிப்புகள் வெளியாகும் எனவும் அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

## மன்னார்...

மின்சாரம் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் செயலாளர் கூறினார்.

இந்த திட்டங்களை ஒப்பந்தம் செய்யும்போது நாட்டுக்கு பாதகமான பல நிபந்தனைகளின் கீழ் ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இத் திட்டங்களுக்கான காணித் தெரிவில், காணிகளை விவசாயத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதன் மூலம் காணியை மிகவும் திறம்படப் பயன்படுத்த முடியும் என கண்டறியப்பட்டுள்ளதாக பேராசிரியர் உதயங்க ஹேமபால தெரிவித்தார்.

அந்த திட்டங்களில் இருந்து மின்சாரத்தை பெற்றுக்கொள்ளும் போது, ஒரு அலகுக்கு செலவிடப்படும் தொகை மற்றும் திட்டத்தால் ஏற்படும் பொருளாதாரப் பலன்கள் ஆகியவை கருத்தில் கொள்ளப்படும் என அவர் கூறினார்.

குறித்த குழுவின் அறிக்கையை ஒரு மாத காலத்துக்குள் வழங்குமாறு குழு உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை 716 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 27

பொதுத்தேர்தல் தொடர்பில் இதுவரை 716 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகதேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தல் குறித்த முறைப்பாடுகளில் நேற்று பிற்பகல் 4.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் 53 சட்ட மீறல்கள் குறித்த முறைப்பாடுகளும் ஒரு வன்முறைச் சம்பவமும் பதிவாகியுள்ளன.

இதனிடையே கடந்த மாதம் 26 திகதியிலிருந்து நேற்றுமுன்தினம் மாலை வரை 716 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அந்தவகையில் 06 வன்முறைச் சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இருப்பினும் அதிகளவில் சட்டமீறல் குறித்த முறைப்பாடுகளே பதிவாகியுள்ளன.

அந்தவகையில் இதுவரை தேசிய தேர்தல் முறைப்பாட்டு மையத்திற்கு மாத்திரம் சட்டமீறல்கள் குறித்த 225 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன்,மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 470 சட்டமீறல்கள் குறித்த முறைப்பாடுகள் இது வரை கிடைக்கப் பெற்றுள்ளன.

அதேவேளை,ஆறு வன்முறைச் சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. கிடைக்கப்பெற்ற 716 முறைப்பாடுகளில் 580 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அதேவேளை 136 முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டை இன்று முதல் விநியோகம்

கொழும்பு, ஒக். 27

பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் மாவட்டச் செயலாளர் அலுவலகங்கள் ஊடாக தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இன்று முதல் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதியுடன் வாக்காளர் அட்டை விநியோக பணிகள் நிறைவடையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## 4ஆவது கடன் தவணை டிசெம்பரில் வெளியீடு

கொழும்பு, ஒக். 27

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கவேண்டிய நான்காவது கடன் தவணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் வெளியிடப்படும் என்று உயர்மட்ட இராஜதந் திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நான்காவது கடன் தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெறவுள்ளது. இதற்கு முன்னர் கடந்த அரசாங்கத்தின் கீழ் மூன்று தவணைகளுக்கு 996 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுள்ளது. இந்த கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த கடன் தொகை 2,900 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இந்த வருடத்தின் கடந்த ஆறு மாத கால பொருளாதார நிலவரத்தின் முதற்கட்ட ஆய்வுக்கு பின் இந்த ஆண்டு கடன் தொகை விடுவிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

அடுத்த வருடத்துக்கான கடன் வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்த வருடம் அரசாங்கம் முன்வைத்த இடைக்கால நியமக் கணக்கை தயாரிப்பதற்கு முன்னதாக நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது என்று அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கறவை மாடு இறக்குமதியில் 4 அமைச்சர்கள் பண மோசடி!

### கொழும்பு ஊடகம் ஒன்று தகவல்

கொழும்பு, ஒக். 27

**வெளிநாடுகளில் இருந்து கறவை மாடுகள் இறக்குமதியில் நான்கு அமைச்சர்கள் பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெளிநாடுகளில் இருந்து கறவை மாடுகளை இறக்குமதி செய்யும் திட்டம் என்ற போர்வையில் பாரிய பண மோசடியில் ஈடுபட்டதாக கூறப்படும் நான்கு முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக விரைவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

11.9 மில்லியன் டொலர் பெறுமதியான 20,000 கறவை மாடுகளை இறக்குமதி செய்து பாரியளவில் மோசடியில் ஈடுபட்டுள்ள பொறுப்பான அமைச்சர்கள் நால்வருக்கு எதிராக சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த பண மோசடிக்கு காரணமான நான்கு முன்னாள் அமைச்சர்களுக்கு தொடர்பு உள்ளது. அவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு தண்டனை வழங்கப்படும்.

இந்த கறவை மாடு திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் இருந்து 20,000 கால்நடைகள் இறக்குமதி செய்யப்படவுள்ள நிலையில், முதல் கட்டமாக சுமார் 5,000 கால்நடைகளை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

இந்த 5,000 கால்நடைகளில் 300 கால்நடைகள் தற்போது உயிருடன் உள்ளன. இதுவரை 4,700 கால் நடைகள் உயிரிழந்துள்ளன. வெளி நாட்டில் இருந்து ஒரு மாடு வாங்குவதற்கு சுமார் 2 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. மாட்டின் விலையை விட மாட்டு கொட்டகையின் விலை அதிகம்.

இந்த கறவை மாடுகளை கொள்வனவு செய்து அசௌகரியங்களுக்கு உள்ளான எமது விவசாயிகளுக்கு நீதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் பிரதமர் சந்திப்பு

கொழும்பு, ஒக். 27

பிரதமர் கலாநிதி ஹரிணி அமர சூரியவுக்கும் அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாட லொன்று நேற்றுமுன் தினம் பிரத மர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, ஆசிரியர் ஆலோ சகர் சேவை, பிரிவெனா ஆசிரியர் சேவை உள்ளிட்ட சேவைகளில் உள்ள பிரச்சனைகள் குறித்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் பிரதமரிடம் தெரிவித்தனர். இந்நிகழ்வில் பிரதமரின் செய லாளர் பிரதீப் சபுதந்திரி மற்றும் அதிபர், ஆசிரியர்கள் சேவையை பிரதிநிதித்துவப்படுத்தும் பல தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (அ)



# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்துக்கு மட்டு. பொலிஸார் தடை!

மட்டக்களப்பு, ஒக். 27

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால், மட்டக்களப்பு நகரில் நேற்று முன்னெடுக்கப் படவிருந்த கவனயீர்ப்புப் போராட்டம் பொலிஸாரால் இடைமறிக்கப்பட்டது.

மாதந்தோறும், சுழற்சி முறையில் கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்துவரும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களது உறவுகளின் சங்கத்தினர், இம் மாதத்திற்குரிய போராட்டத்தை முன்னெடுக்க விளைந்த வேளை, பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி அமலநாயகி தலைமையில் நேற்று மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்துக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அவ் இடத்திற்கு வருகை தந்த, மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொலிஸார், தேர்தல் காலத்தைச் சுட்டிக்காட்டி, ஒன்றுகூடுவதற்கு தடை விதித்ததோடு, அங்கிருந்தவர்களை வெளியேறிச் செல்லுமாறும் பணித்தனர்.

பொலிஸாரின் உத்தரவால் ஏமாற்றமடைந்த, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், கவனயீர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டு, வெளியேறினர். (அ)

# பேராயரை விமர்சனம் செய்வதற்கு கம்மன்பிலவுக்கு உரிமை இல்லை!

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 27

'பேராயரை விமர்சிப்பதற்கு கம்மன்பிலவுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. அரசியல் இலாபம் கருதியே அவர் அறிக்கையை வெளியிட்டுள்ளார்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற தேர்தல் வேட்பாளர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் திசை திருப்பபடக்கூடாது. அவை வெளிப்படைதன்மையுடன் இடம்பெறவேண்டும். இது விடயத்தில் கத்தோலிக்க சபை நிற்கும் பக்கமே நாம் நிற்போம்.

பேராயரை விமர்சிப்பதற்கு உதய கம்மன்பிலவுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. நாட்டில் தேவையற்ற பிரச்னைகளை உருவாக்குவதற்கே கம்மன்பில தரப்பு முயற்சிக்கின்றது.

மலட்டு கொத்து, மலட்டு மார்பு கச்சை உள்ளிட் விடயங்கள் தொடர்பில் இவர்களே பிரசாரம் முன்னெடுத்தனர். இஸ்லாம் அடிப்படைவாதம் பற்றி பாடம்கூட எடுத்துள்ளனர்.

தேர்தல் நெருங்கும்வேளை, அரசியல் இலாபம் தேடும் நோக்கிலேயே கம்மன்பில அறிக்கையை வெளியிட்டிருக்கக்கூடும் என்ற சந்தேகம் உள்ளது-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org